**1. "Global Risks Report 2017" எந்த சர்வதேச அமைப்பு மூலம் வெளியிடப்பட்டது ?**

A. ஐக்கிய நாடுகள் சபை(UN)
B. சர்வதேச நாணய நிதியம் (IMF)
C. ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)
D. உலக பொருளாதார சம்மேளனம் (WEF)

**விடை: D. உலக பொருளாதார சம்மேளனம் (WEF)**

உலக பொருளாதார சம்மேளனம், சமீபத்தில் அதன் 12வது பதிப்பான "Global Risks Report 2017" அறிக்கையை வெளியிட்டது, இவ்வறிக்கை உலகளவில் மிகவும் குறிப்பிடத்தக்க நீண்டகால ஆபத்துக்களை உயர்த்திக்காட்டுகிறது. இந்த ஆண்டின் அறிக்கை, 2017-ல் உலகம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்த ஒரு மேற்பார்வை வழங்கும் மற்றும் அவற்றுள் உயரும் சமத்துவமின்மை, அரசியல் துருவப்படுத்தல், தேசியவாதம், மற்றும் இடைஞ்சல் தொழில்நுட்ப மாற்றம் ஆகிய சிலவற்றுக்கான மூல காரணங்களையும் ஆராய்கிறது.

**2. ஸ்ரேயாஸ் மேத்தா(Shreyas Mehta), எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?**

A. ஸ்குவாஷ்
B. டேபிள் டென்னிஸ்
C. டென்னிஸ்
D. பூப்பந்து

**விடை: A. ஸ்குவாஷ்**

இந்திய U-13 ஸ்குவாஷ் வீரர் ஸ்ரேயாஸ் மேத்தா, சமீபத்தில் ஸ்காட்லாந்தின் எடின்பர்க்கில் நடந்த இறுதிப் போட்டியில் கொலம்பியாவின் ஜுவான் ஜோஸ் டோரஸ் லாராவை தோற்கடித்து, 2017 ஸ்காட்டிஷ் ஜூனியர் ஓபன் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றுள்ளார்.

**3. “My Odyssey: Memoirs of the Man behind the Mangalyaan Mission” என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டுள்ளது ?**

A. ஜி மாதவன் நாயர்
B. கே ராதாகிருஷ்ணன்
C. சைலேஷ் நாயக்
D. ஏ எஸ் கிரண் குமார்

**விடை: B. கே ராதாகிருஷ்ணன்**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின்(ISRO) முன்னாள் தலைவர் டாக்டர். கே ராதாகிருஷ்ணன், “My Odyssey: Memoirs of the Man behind the Mangalyaan Mission” என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

**4. உலக வங்கியின்(WB) சமீபத்திய அறிக்கையின்படி, நிதியாண்டு 17(FY 17)-ல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் என்ன ?**

A. 7.1%
B. 7.2%
C. 7.3%
D. 7.0%

**விடை: D. 7.0%**

உலக வங்கி அதன் சமீபத்திய அறிக்கையில் FY 17 (2016-17)-ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை 7.0% ஆக குறைத்துள்ளது. பணமதிப்பிழத்தல்(demonetization) செயலினால் 7.6%-லிருந்த விகிதத்தை 7.0% ஆக குறைத்தது. அறிக்கையின் படி, நவம்பர் 2016-ல் முதல் அதிகளவிலான பணத்தை எடுக்கமுடியாதது மற்றும் பழைய நோட்டுகளுக்கு மாற்றாக புதிய நோட்டு மாற்றுதல் ஆகிய இரண்டும் வளர்ச்சி குறைவதற்கு பங்களித்தன எனக் கூறப்படுகிறது. மேலும் இந்த அறிக்கையானது, அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்தியா 7.6% மற்றும் 7.8% வளர்ச்சியை தக்கவைத்துக்கொள்ளும் என்றும், உள்நாட்டு வழங்கல் இடர்ப்பாடுகளை நீக்க மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்க பல்வேறு சீர்திருத்த முயற்சிகள் செய்யும் என எதிர்பார்க்கலாம் என்றும் கூறுகிறது.

**5. நோபல் பரிசுத் தொடர் இந்தியா 2017 (Nobel Prize Series India 2017), சமீபத்தில் எந்த மாநிலத்தில் தொடங்கியது ?**

A. மகாராஷ்டிரா
B. அசாம்
C. குஜராத்
D. பஞ்சாப்

**விடை: C. குஜராத்**

பிரதமர் நரேந்திர மோடி, சமீபத்தில் குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்ற துடிப்பான குஜராத் உலகளாவிய மாநாட்டில், கண்டுபிடிப்பு மற்றும் ஆக்கப்பூர்வமான சிந்தனையை தூண்டுவதற்காக நோபல் பரிசுத் தொடர் இந்தியா 2017-யை தொடங்கி வைத்தார். இந்த நோபல் பரிசுத் தொடர், 5-வார நீண்ட அறிவியல் கண்காட்சியை கொண்டிருக்கும், இதனை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை (DST / DBT) மற்றும் நோபல் மீடியா ஏற்பாடு செய்துள்ளது. நோபல் பரிசு பெற்றவர்களை வைத்து இந்தியாவில் இது போன்ற நிகழ்வை நடத்துவது இதுவே முதன்முறை மற்றும் ஏறத்தாழ 9 நோபல் பரிசு பெற்றவர்கள் கண்காட்சியில் பங்கேற்கின்றனர். இந்த தனித்துவமான நிகழ்ச்சியானது கண்காட்சி, மாநாடு, விரிவுரைகள், வட்டமேசை சந்திப்புகள் மற்றும் இன்னபிற சந்திப்பு இடைவெளிகளை ஒருங்கிணைக்கிறது.

**6. எந்த மாநில அரசு, உள்ளூர் மொழியில் பணமில்லா பரிவர்த்தனை செய்ய "Tokapoisa.in" என்ற மின்-பணப்பையை(e-wallet) தொடங்கவுள்ளது ?**

A. ஒடிசா
B. அசாம்
C. மணிப்பூர்
D. கேரளா

**விடை: B. அசாம்**

அசாம் அரசு, மாநில மக்கள் உள்ளூர் மொழியில் தொந்தரவு இல்லாமல் ஆன்லைன் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள மாநிலத்திலேயே உருவாக்கப்பட்ட "Tokapoisa.in" எனும் மின்-பணப்பையை தொடங்கவுள்ளது. மின்-பணப்பை என்பதை தவிர்த்து, இது விர்சுவல் கட்டண முனையமாகவும், அரசு தொடர்பான பரிவர்த்தனைகளை செயல்படுத்தவும் உதவும். இந்த மின்-பணப்பை, Assam Electronics Development Corp. Ltd மூலம் உருவாக்கப்பட்டது மற்றும் Amrton, ICICI வங்கி மூலம் இயக்கப்படும். இந்த பயன்பாட்டின் மூலம் சிறிய கடைக்காரர்கள் உட்பட வர்த்தகர்களும் தங்கள் பணபரிவர்த்தனைகளின் பதிவுகளை பார்த்துகொள்ள முடியும், முழுநேர கணக்காளர்களாக ஈடுபட முடியாத சிறு வணிகர்களுக்கும் 'accounting package' என்ற அம்சம் மூலம் தங்கள் பரிவர்த்தனை பதிவுகளை பார்த்துகொள்ளலாம்.

**7. 2017 உலக பொருளாதார சம்மேளனத்தின்(WEF) வருடாந்திர கூட்டம், எந்த நாட்டில் நடைபெறவுள்ளது ?**

A. இந்தியா
B. மலேஷியா
C. சுவிச்சர்லாந்து
D. தென் ஆப்ரிக்கா

**விடை: C. சுவிச்சர்லாந்து**

2017 உலக பொருளாதார சம்மேளனத்தின்(WEF) வருடாந்திர கூட்டம், "Responsive and Responsible Leadership" என்ற தலைப்பில் ஜனவரி 17-20 வரை சுவிச்சர்லாந்தின் டாவோஸ்-ல் நடைபெறவுள்ளது. மாநாட்டின் நோக்கம், உலகின் நிலைமையை மேம்படுத்துதல் மற்றும் உலகம் எதிர்கொண்டுள்ள மிக முக்கியமான பிரச்சினைகள் பற்றி விவாதித்தல். இந்த உச்சி மாநாட்டின் செழிப்பான மேடையில், இயக்குனர் கரன் ஜோகர் கலாச்சார தலைவர்களுள் ஒருவராக அழைக்கப்பட்டுள்ளார்.

**8. ஜிக்மி டோர்ஜி தேசிய பூங்கா(Jigme Dorji National Park), எந்த நாட்டில் அமைந்துள்ளது ?**

A. இந்தியா
B. நேபாளம்

C. வங்க தேசம்
D. பூடான்

**விடை: D. பூடான்**

பூடானின் 2-வது பெரிய தேசிய பூங்காவான ஜிக்மி டோர்ஜி தேசிய பூங்கா, பூடானின் 3-வது Druk Gyalpo-வான ஜிக்மி டோர்ஜி வாங்சக் நினைவாக வைக்கப்பட்டுள்ளது. பூங்கா, 4316 சதுர கிமீ நீண்டுள்ளது மற்றும் பனிச்சிறுத்தை, புள்ளியிட்ட சிறுத்தைகள், வங்கப்புலி, பாரல் அல்லது இமாலய நீலநிற ஆடு முதலிய 37 அறியப்பட்ட பாலூட்டி இனங்களுக்கு சரணாலயமாக உள்ளது. பூடானின் தேசிய விலங்கு(Takin), மலர் (blue poppy), பறவை (raven) மற்றும் மரம் (cypress) ஆகிய அனைத்தும் ஒன்றாக அமைந்துள்ள பூடானின் ஒரே பூங்கா இதுவேயாகும்.

**9. உலக இந்தி தினம் (WHD), எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. ஜனவரி 10
B. ஜனவரி 11
C. ஜனவரி 12
D. ஜனவரி 9

**விடை: A. ஜனவரி 10**

உலகம் முழுவதும் இந்தியை ஊக்குவிக்கவும், 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் உலக இந்தி மாநாட்டின் ஆண்டு நிறைவை குறிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 10ம் தேதி உலக இந்தி தினம்(WHD) அனுசரிக்கப்படுகிறது.

**10. சமீபத்தில் மறைந்த பீட்டர் சார்ஸ்டெட்(Peter Sarstedt), எந்த நாட்டின் நன்கு அறியப்பட்ட பாடகர்-பாடலாசிரியர் ?**

A. இங்கிலாந்து
B. அமெரிக்கா
C. ஜெர்மனி
D. பிரான்ஸ்

**விடை: A. இங்கிலாந்து**

நன்கு அறியப்பட்ட ஆங்கில பாடகர்-பாடலாசிரியர் பீட்டர் சார்ஸ்டெட்(75), சமீபத்தில் இங்கிலாந்தின் Sussex-ல் காலமானார். இவர் 1941 ஆம் ஆண்டு புது தில்லியில் பிறந்தார். இந்தியா, பிரிட்டிஷ் ராஜின் பகுதியாக இருந்தபோது இவரது பெற்றோர் பிரிட்டிஷ் நிர்வாகத்தில் அரசு ஊழியர்களாக இருந்தனர்.

**11. எந்த இந்திய ஹாக்கி வீரர், சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் விளையாட்டு வீரர்கள் குழுவின்(International Hockey Federation (FIH) Athletes' Committee) உறுப்பினராகியுள்ளார் ?**

A. வி ஆர் ரகுநாத்
B. ஆகாஷ்தீப் சிங்
C. நிக்கின் திம்மையா
D. பி ஆர் ஸ்ரீஜேஷ்

**விடை:D. பி ஆர் ஸ்ரீஜேஷ்**

இந்திய ஹாக்கி அணி கேப்டன் பி ஆர் ஸ்ரீஜேஷ், சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் விளையாட்டு வீரர்கள் குழுவின்(International Hockey Federation (FIH) Athletes' Committee) உறுப்பினராகியுள்ளார். FIH முடிவெடுக்கும் செயல்பாட்டில் வீரர்களின் குரலை உறுதி செய்ய, FIH மற்றும் விளையாட்டு வீரர்கள் இடையே ஒரு பாலமாக செயல்பட வேண்டிய பொறுப்பு இக்குழுவிற்கு உள்ளது, இதில் தற்போதைய மற்றும் முன்னாள் ஹாக்கி வீரர்கள் என மொத்தம் 8 பேர் உள்ளனர். FIH விளையாட்டு வீரர்கள் குழுவானது, தடகள வீரர்களுக்கு தேவையான வசதிகளை வழங்கும், ஊக்குவிக்கும், தடகளவீரர் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை உருவாக்கல் மற்றும் மேலாண்மை, எதிர்ப்பு ஊக்கமருந்து, பந்தயம் மற்றும் சூதாட்டம் சம்மந்தப்பட்ட தலைப்புகளில் வழிநடத்தும்.

**12. எஃப்எம் ரேடியோ ஒலிபரப்பை நிறுத்தவுள்ள உலகின் முதல் நாடு எது ?**

A. பின்லாந்து

B. சுவிச்சர்லாந்து
C. நார்வே
D. சிங்கப்பூர்

**விடை:C. நார்வே**

எஃப்எம் ரேடியோ ஒலிபரப்பை நிறுத்தவுள்ள உலகின் முதல் நாடு நார்வே மற்றும் அதிக ஒலி தரம் கொண்ட ஒரு பரந்த ஒலிபரப்பு விருப்பத்தை வழங்கும் டிஜிட்டல் ஆடியோ ஒலிபரப்பிற்கு(Digital Audio Broadcasting) மாறவுள்ளது. முழு மக்கள் தொகைக்கும் ஒரு சிறந்த வானொலி சேவையை வழங்குவதே இந்த தொழில்நுட்ப மாற்றத்தின் முக்கிய காரணம் ஆகும். மேலும் இந்த டிஜிட்டல்மயமானது அவசரகால தயார்நிலை அமைப்பு மேம்படுத்துகிறது, போட்டி அதிகரிக்கும் வசதியை அளிக்கிறது மற்றும் கண்டுபிடிப்பு மற்றும் மேம்பாட்டில் புதிய வாய்ப்புகளை வழங்கும் . நார்வேயின் வடக்கில் Nordland-ல் தொடங்கி மாகாணம் வாரியாக இந்த மாற்றம் நிகழ்கிறது. தலைநகர் ஒஸ்லோ செப்டம்பர் 2017-ல் பண்பலை ஒலிபரப்பை நிறுத்தவுள்ளது மற்றும் டிசம்பர் 2017-ல் நாடு முழுவதும் இந்த செயல்முறை நிறைவேறிவிடும்.

**13. நிகரகுவா (Nicaragua) -வின் புதிய தலைவராக பதவி ஏற்றுக்கொண்டுள்ளவர் யார் ?**

A. அர்னால்டோ அலெமன்
B. டேனியல் ஒர்டேகா
C. என்ரிகுயு போலநோஸ்
D. ரொசாரியோ முரில்லோ

**விடை: B. டேனியல் ஒர்டேகா**

முன்னாள் புரட்சிப்போராளி டேனியல் ஒர்டேகா, 3வது முறையாக நிகரகுவாவின் தலைவராக பதவியேற்கிறார் மற்றும் அவரது மனைவி ரொசாரியோ முரில்லோ புதிய துணைத் தலைவராய் பொறுப்பேற்கிறார்.

**14. 2017 Disability Communication மீதான சர்வதேச மாநாடு(ICDC), எந்த நாட்டில் நடைபெற்றது ?**

A. இந்தியா
B. சீனா
C. தென் ஆப்பிரிக்கா
D. பிரேசில்

**விடை: A. இந்தியா**

'Disability Communication: Perspectives and Challenges in the 21st Century (ICDC-2017)' மீதான சர்வதேச மாநாடு, மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள Rambhau Mhalgi Prabodhini-ல் ஜனவரி 9-11, 2017 தேதிகளில் நடைபெற்றது. கற்றல், கலந்துரையாடல் மற்றும் அடையாள உருவாக்க கல்வி குறித்த உரையாடல்களை நிகழ்த்த ஒரு மன்றத்தை உருவாக்குவதே ICDC-2017-ன் நோக்கம். மாநாட்டின் முக்கிய நோக்கம், Dis/Ability communication-ல் முதுகலை பட்டத்தை கொண்டுவர அடித்தளத்தை உருவாக்குதல் மற்றும் dis/ability communication துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு அணுக தேவையானவை மற்றும் ஆராய விரும்புபவர்களுக்க் தேவையானதை வழங்குவதாகும். ICDC-2017 மாநாட்டை, AYJNISHD (டி) மும்பை மற்றும் ஆராய்ச்சி குழு, Jonkoping University, Sweden-ன் Communication, Culture & Diversity (CCD) உடன் இணைந்து Department of Communication and Journalism, University of Mumbai ஏற்பாடு செய்திருந்தது.

**15. பின்வரும் நாடுகளில் எது "Festival of India" விழாவை ஏற்பாடு செய்யும் ?**

A. கானா
B. மொரிஷியஸ்
C. சாம்பியா
D. கென்யா

**விடை: A. கானா**

கானா, ஜனவரி 25 முதல் மார்ச் 16 வரை "Festival of India" விழாவை ஏற்பாடு செய்துள்ளது. இந்திய பாரம்பரிய நடனங்கள், சுபி மற்றும் நாட்டுப்புற இசை மற்றும் சப்தராங் - வந்தே மாதரத்தில் நிறைவடையும் ஏழு கிளாசிக்கல் நடன வடிவங்களின் சங்கமம் ஆகியவை விழா செயல்பாடுகளில் அடங்கும். இந்த

அனுபவத்தை பூர்த்தி செய்யும் விதமாக, பண்டிகையின்போது உணவு விழா, யோகா மற்றும் தியானம், திரைப்பட விழா ஏற்பாடு செய்யப்படும். விழா நிகழ்வுகள் கானாவில் உள்ள அக்ரா, குமாசி, கேப் கோஸ்ட், தகோரடி ஆகிய நான்கு நகரங்களில் ஒளிபரப்பப்படும்.

**16. பின்வரும் எந்த கல்வாரி-வகுப்பு ஸ்கார்ப்பின் ரகசிய நீர்மூழ்கி கப்பல், சமீபத்தில் கடல் சோதனைக்காக தொடங்கப்பட்டுள்ளது ?**

A. சிந்துகோஷ்
B. கன்தேரி
C. அரிஹந்த்
D. வேலா

**விடை: B. கன்தேரி**

இந்தியாவின் இரண்டாவது கல்வாரி-வகுப்பு ஸ்கார்ப்பின் ரகசிய நீர்மூழ்கி கப்பல் 'INS கன்தேரி', மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள Mazagon Dock Shipbuilders Limited-ல் தொடங்கப்பட்டது. இது உயர்ந்த ரகசிய திறன், டார்பிடோக்கள் மற்றும் நீருக்கடியில் அல்லது மேற்பரப்பில் குழாய்-ஏவப்பட்ட கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை முடக்கிவிட்டு தாக்குதல் நடத்தும் திறன் கொண்டது. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கடலில் தங்கள் மேலாதிக்கத்தை உறுதி செய்ய முக்கிய பங்கு வகித்த மராட்டிய படையின் தீவு கோட்டையின் பெயரே இதற்கு சூட்டப்பட்டுள்ளது. மேலும் கன்தேரி என்பது டைகர் ஷார்க்கின் பெயராக உள்ளது. இந்த நீர்மூழ்கிகப்பல், ஆண்டு முடிவில் இந்திய கடற்படைக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**17. சமீபத்தில் மறைந்த ரோமன் ஹெர்ஸாக்(Roman Herzog), எந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ?**

A. பிரான்ஸ்
B. இங்கிலாந்து
C. ஜெர்மனி
D. ரஷ்யா

**விடை: C. ஜெர்மனி**

ஜெர்மனியின் முன்னாள் ஜனாதிபதி ரோமன் ஹெர்ஸாக் (82), சமீபத்தில் ஜெர்மனியில் உள்ள Bad Mergentheim-ல் காலமானார். ஜெர்மனி மறுஒற்றுமைக்குபின் ஜெர்மனியின் முதல் ஜனாதிபதியாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெர்மனியில் அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தத்தில் திடீர் மாற்றங்களை வலியுறுத்தியதன் மூலம் ஹெர்ஸாக் நன்கு நினைவில் கொள்ளப்படுவார்.

**18. 2016 கொல்கத்தா ஓபன் நேஷனல் இன்விடேஷன் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்றவர் யார் ?**

A. ஆதித்யா மேத்தா
B. யாசின் மெர்ச்சன்ட்
C. கீத் சேத்தி
D. பங்கஜ் அத்வானி

**விடை: D. பங்கஜ் அத்வானி**

இந்திய மேடைக்கோற்பந்தாட்டக்காரர்(cueist) பங்கஜ் அத்வானி, 5-1 என்ற புள்ளிகள் மூலம் ஆதித்யா மேத்தாவை தோற்கடித்து 3 ஆம் பதிப்பான கொல்கத்தா ஓபன் நேஷனல் இன்விடேஷன் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் 2017-யை வென்றுள்ளார் மற்றும் மேற்கு வங்கத்தின் Bengal Rowing Club-ல் 3வது கொல்கத்தா ஓபன் நேஷனல் இன்விடேஷன் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் 2017-யை வெல்கிறார். மேற்கு வங்க பில்லியர்ட்ஸ் சங்கம் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

**19. தாண்டோட்டத்தை(Parkour) அதிகாரப்பூர்வமாக ஒரு விளையாட்டாக அங்கீகரித்த உலகின் முதல் நாடு எது ?**

A. அமெரிக்கா
B. சிங்கப்பூர்
C. மலேஷியா
D. ஐக்கிய ராஜ்யம்

**விடை: D. ஐக்கிய ராஜ்யம்**

தாண்டோட்டத்தை அதிகாரப்பூர்வமாக ஒரு விளையாட்டாக அங்கீகரித்த உலகின் முதல் நாடு ஐக்கிய ராஜ்யம். freerunning என அழைக்கப்படும் தாண்டோட்டம் என்பது உடலில் உள்ள இயற்கையான வலிமையை மட்டும் பயன்படுத்தி நிலப்பரப்பில் முக்கியமாக ஓடுதல், குதித்தல் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் ஏறுதல் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இதன் மூலம், இந்த விளையாட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தற்போது அரசு மற்றும் தேசிய லாட்டரிகளிடம் இருந்து நிதிபெற விண்ணப்பிக்க முடியும்.

**20. “The Untold Story of Talking Books” என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டுள்ளது ?**

A. மேத்யு ரூபேரி
B. ராமகிருஷ்ண ரெட்டி
C. கரேன் ஜூனேஜா
D. பிரதீப் செபாஸ்டியன்

**விடை: A. மேத்யு ரூபேரி**

“The Untold Story of Talking Books” என்ற புத்தகத்தை மேத்யு ரூபேரி எழுதியுள்ளார். ஆடியோ புத்தகங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தில் இப்புத்தகம் கவனம் செலுத்துகிறது.

**21. கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் 2017 ஆண்டுக்கான ஆண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டில் கால் இறுதி சுற்றில் வெற்றி கோப்பையை தட்டி சென்றவர்?**

A. Novak Djokovic
B. Andy Murray
C. Rafael Nadal
D. Stefan Edberg

**விடை: A. நோவாக் ஜோகோவிச்**

செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் நடைபெற்ற கலிபா சர்வதேச டென்னிஸ் விளையாட்டில் செர்பியன் நாட்டை சேர்ந்த நோவக் கால் இறுதி சுற்றில் அண்டிமுரவை எதிர்த்து 6-3 5-7 6-4 என்ற கணக்கில வென்றுள்ளார். இருவருக்கும் இடையே நடக்கும் 36வது விளையாட்டு இது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் அண்டிமுர தனது 25வது வெற்றியை இழந்தார்

**22. கானாவின் புதிய அதிபராக பதவியயேற்று உள்ளவர் யார்?**

A. Kwesi Amissah-Arthur

B. Nana Akufo-Addo

C. Mahamudu Bawumia

D. John Mahama

**விடை: B. நானா அகுபோ அடோ (Nana Akufo-Addo)**

ஜனவரி 7,2017 அன்று கானாவின் புதிய அதிபராக நானா அகுபோ அடோ பதவியயேற்றார். 2001 இல் ஆட்சி அமைத்தார். புதிய தேசபற்று கட்சயின் முன்னால் அமைச்சராகவும் நாட்டின் முதன்மை வழக்கறியராகவும் பதவி வகித்துள்ளார்.

**23. 2017 ஆண்டின் பெண்கள் இரட்டையர்களுக்கான சர்வதேச WTA பிரிஸ்பன் கோப்பையை வென்றுள்ள ஜோடி?**

A. Elena Vesnina and Sania Mirza

B. Elena Vesnina and Martina Hingis

C. Sania Mirza and Bethanie Mattek-Sands

D. Sania Mirza and Martina Hingis

**விடை: C. சானியா மிர்சா மற்றும் பெத்தானி மேடக் (Sania Mirza and Bethanie Mattek-Sands)**

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சா இரட்டையர் பிரிவில் ஆண்டின் முதல் சீசனை வெற்றிகரமாக தொடங்கி உள்ளார். அமெரிக் காவின் பெத்தானி மேடக்குடன் இணைந்து விளையாடிய சானியா,

பிரிஸ்பேன் மகளிர் சர்வதேச டென்னிஸ் போட்டி தொடரின் இறுதி போட்டியில் 6-2, 6-3 என்ற நேர் செட்டில் தரவரிசையில் 2-வது இடத்தில் உள்ள ரஷ்யாவின் கேத்ரினா மகரோவா, எலீனா வெஸ்னினா ஜோடியை வீழ்த்தி வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

சாம்பியன் பட்டம் வென்ற அதே வேளையில் உலகத் தரவரிசையில் இரட்டையர் பிரிவில் வகித்த முதலி டத்தை சானியா இழந்துள்ளார். 91 வாரங்கள் முதலிடத்தில் நீடித்த சானியா அந்த இடத்தை தனது இணையான பெத்தானி மேடக்கிடம் பறிகொடுத்துள்ளார்.

**24. "The Untold Vajpayee: Politician and Paradox" என்ற புத்தகத்தினை எழுதியவர்?**

A. Arun Shourie

B. Chaudhary Devi Lal

C. Lal Krishna Advani

D. Ullekh NP

**விடை: D. (Ullekh NP)**

"The Untold Vajpayee: Politician and Paradox" என்ற புத்தகத்தினை எழுதியவர் பத்திரிக்கையாளரான உலேக்ஹா NP ஆவார். இதில் சச்சரவுகளை ஏற்படுத்த கூடிய அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் லால் கிருஷ்ணா அத்வானி பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளது. மேலும் கட்சிகளுகிடைய உள்ள விவாதங்கள் மற்றும் தேசிய வரலாறு (குஜராத் அடக்குமுறையின் பின்விளைவு-2002) ஆகியவற்றையும் கூறுகிறது. கோத்ரா ரயில் வெடி விபத்து மற்றும் கலக அடக்குமுறை காரணமாக "மோடி வெளியேற வேண்டும்"(அப்போது குஜராத் முதலமைச்சர் மோடி) என்ற கூற்றுகளுடன் வெளியாயின. இவ்வாறு நடந்தால் குஜராத் ஆனது ஒழுங்கின்னமைக்கு உட்படும் என அத்வானி கூறியுள்ளது அப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

**25. தீவிரவாதத்திற்கு எதிரான முஸ்லிம் இராணுவ அமைப்பு அமைந்துள்ள இடம்?**

A. ரியாத்

B. தெஹ்ரான்
C. லாகூர்
D. அங்காரா

**விடை: A. ரியாத்**

தீவிரவாதத்திற்கு எதிரான முஸ்லிம் இராணுவ அமைப்பு ஆனது பல்வேறு நாடுகளுக்கிடையேயான இராணுவ அமைப்பாகும். 39 முஸ்லிம் நாடுகள் இணைந்து உருவான இந்த அமைப்பு ISIL மற்றும் இது போன்ற தீவிரவாதத்திற்கு எதிரானதாகும். சமிபத்தில் ஓய்வு பெற்ற பாகிஸ்தானின் முக்கிய இராணுவ பணியாளரான ரஹீல் ஷரிப், இந்த தீவிரவாதத்திற்கு எதிரான முஸ்லிம் இராணுவ அமைப்பின் முக்கிய இராணுவ பணியாளராக நியமிக்கபட்டுள்ளார். இதன் தலைமையகம் சவுதி அரேபியாவில் உள்ள ரியோத்தில் உள்ளது.

**26. உலகிலேயே முதன் முதலில் எந்த நாடு FM (அதிர்வெண் பண்பேற்றம்) ரேடியோ சேவையை நிறுத்தி உள்ளது?**

A. United Kingdom
B. Switzerland
C. Norway
D. Finland

**விடை: C. நார்வே**

1950இல் தொடங்கப்பட்ட FM (அதிர்வெண் பண்பேற்றம்) முறையினை ஜனவரி 7, 2017 அன்று நார்த்தன் சிட்டி போடோவில் முற்றிலுமாக டிஜிட்டல் முறையில் மாற்றி உள்ளது நார்வே அரசு. டிஜிட்டல் முறையின் மூலம் நிதி சேமிப்பு முறை மற்றும் தேசிய ரேடியோ மூலம் அதிக செய்திகளை எடுத்து செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. வேலைவாய்ப்புகளுக்கும், புதிய கருத்துகளும், அவசர கால உதவிகளுக்கும் இது வழிவகுக்கும்.

**27. 2017 ஜெய்பூர் சர்வதேச திரைப்பட திருவிழாவில், வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு அளிக்கப்பட்டது?**

A. ஓம் பூரி
B. அமிதாப் பச்சன்
C. நஸ்ருதின் ஷா
D. ரமேஷ் பிரசாத்

**விடை: D. ரமேஷ் பிரசாத்**

9வது ஜெய்பூர் சர்வதேச திரைப்பட திருவிழா ஜனவரி 7,2017 இல் தொடங்கப்பட்டது. 5 நாட்கள் நடைபெறும் இதன் முக்கிய நோக்கமானது இயக்குனர்களின் புதிய யுக்திகள், தொழில்நுட்ப கருத்துகளை பரிமாறி கொள்ளவும் வழிவகுத்தது. மேலும் பல்வேறு தேசிய கலாச்சார முறைகளின் பங்கேற்பு இடம் பெற்றன. சகோதரத்துவ அடிப்படையில் 250 இயக்குனர்கள் மற்றும் கலைஞர்கள் கலந்துகொண்டனர். இதில் சினிமா பற்றிய 17 கருத்தரங்கம் இடம் பெற்றிருந்தன. சினிமாவை பற்றிய தொலைநோக்கு ஆய்வாளரான ரமேஷ் பிரசாத்துக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு அளிக்கப்பட்டது. இவர் மேம்பாடு அடைந்த சினிமா தொழில்நுட்ப கருவிகளை கொண்ட பிரசாத் பட ஆய்வகம் ஒன்றை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**28. எந்த காப்பீடு நிறுவனம் சிட்பி (SIDBI) எனப்படும் சிறு தொழில் முறை முன்னேற்ற வங்கியிடம் ஒப்பந்தம் செய்து உள்ளது?**

A. National Insurance Company Ltd (NICL)
B. Life Insurance Corporation of India (LIC)
C. Oriental Insurance Company Ltd (OICL)
D. New India Assurance Company Ltd (NIACL)

**விடை: B. லைப் இன்சூரன்ஸ் கார்பரேசன் ஆப் இந்தியா (LIC)**

இந்தியாவின் சிறு மற்றும் நடுத்தர தொழில் புரிவோருக்கான முதன்மை பண உதவிக்காக லைப் இன்சூரன்ஸ் கார்பரேசன் ஒப் இந்தியா (LIC) ஆனது சிட்பி எனப்படும் சிறு தொழில் முறை முன்னேற்ற வங்கியிடம் ஒப்பந்தம் செய்து உள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் MoU(MEMORANDUM OF UNDERSTANDING) மூலம் MSMEs எனப்படும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முறைகளை ஊக்கபடுத்த உதவுகிறது

**29. 2017 ஆண்டிற்கான வாகப் போர்ட்ஸ்(WAGF BOARDS) மாநாடு நடைபெற்ற இடம்?**

A. Lucknow
B. New Delhi
C. Jaipur
D. Nagpur

**விடை: B. புது டெல்லி**

வாகப் போர்ட்ஸ்(WAGF BOARDS) மாநாடு அல்லது மாநிலங்களுகிடையேயான தலைவர் மற்றும் செயல் அலுவலர் மாநாடு டெல்லியில் ஜனவரி 7, 2017 அன்று சிறுபான்மை மற்றும் நாடாளுமன்ற விவாத துறை அமைச்சரான முக்தர் அப்பாஸ் நாக்வி அவரால் தொடங்கப்பட்டது. இம்மாநாட்டில் பல்வேறு விவாதங்கள் விவாதிக்கப்பட்டன. அவற்றில் சில வாகப் போர்ட்ஸ்(WAGF BOARDS) நிதிமுறை, நிறைகள், குறைகள் மற்றும் மேம்படுத்தும் வழிமுறைகள் பற்றி தேசிய வாகப் போர்ட்ஸ்(WAGF BOARDS) கார்பரேஷனால் விவாதிக்கப்பட்டன

**30. சித்வான் தேசிய பூங்கா அமைந்துள்ள இடம்?**

A. இந்தியா
B. நேபால்
C. வங்காளம் தேசம்
B. மியான்மார்

**விடை: B. நேபால்**

நேபாளத்தில் அமைந்துள்ள முதல் தேசிய பூங்கா சித்வான் தேசிய பூங்கா ஆகும். 1973 இல் அமைக்கப்பட்டு 1984 இல் மாநில பாரம்பரிய இடமாக அறிவிக்கபட்டது. நேபாளத்தின் தென் பகுதி மற்றும் வெப்ப மண்டல பகுதியான தேரை எனப்படும் இயற்கை பகுதியில் 932 கி.மி பரப்பளவில் அமைந்துள்ளது. 68 பாலுட்டி சிற்றின வகை, 544 பறவை இனம், 58 ஹீர்பிடோபான்ன எனப்படும் குறிப்பிட்ட பகுதியில் வள கூடிய சிற்றினம், 126

மீன்வகைகள் இங்கு வாழ்வதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. முக்கிய பாதுகாக்க வேண்டிய இனமான ஒற்றை கொம்பு காண்டாமிருகம், வங்காளபுலி, கேரியல் முதலை இனங்கள் உள்ளன. சமிபத்தில் சுற்றுலா துறை மேம்பாட்டிற்கான சித்வான் யானைகளின் விழாவை டிசம்பர் 26-30,2016 அன்று நேபால் நடத்தியுள்ளது. இந்த விழாவில் 20,000கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் கலந்துகொண்டனர். 5 நாட்கள் நடைபெற்ற விழாவில் யானைகள் நடனம், யானைகள் அழகு போட்டி, யானைகள் நடை, யானைகள் ஓவிய போட்டி நடைபெற்றன.

**31. மத்திய சுகாதார அமைச்சகம், "Swachh Swasth Sarvatra" முன்னெடுப்பை பின்வரும் எந்த அமைச்சகத்துடன் இணைந்து தொடங்கியுள்ளது ?**

A. குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம்
B. நிதி அமைச்சகம்
C. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்
D. ஆயுஷ் அமைச்சகம்

**விடை: A. குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம்**

மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள்,அதிகமான விழிப்புணர்வு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளின் மூலம் சிறந்த சுகாதார அம்சங்களை அடைய, "Swachh Swasth Sarvatra" முன்னெடுப்பை குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம் , சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் இணைந்து தொடங்கியுள்ளது. இது, இந்தியாவில் உள்ள 708 திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத(ODF) தொகுதிகளில் அதிகளவு தூய்மை மற்றும் சுகாதாரத்தை அடையும்பொருட்டு, இங்குள்ள சமூக ஆரோக்கிய நிலையங்களை(Community Health Centres) வலுப்படுத்தவுள்ளது. இதன் கீழ், துப்புரவு, சுகாதாரம் மற்றும் தொற்று நோய் கட்டுப்பாடு தரத்தை அடையவேண்டி, CHC நிலையங்களை வலுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு CHC-க்கும் நிதி உதவியாக ரூ.10 லட்சம் வழங்கப்படும். இந்த முன்முயற்சி தேசிய சுகாதார திட்டத்தின் கீழ், தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அக்டோபர் 2, 2019 ஆம் ஆண்டில் இந்தியாவை திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நாடாக மாற்றும் குறிக்கோளுடன் கழிப்பறைகள் கட்டுதல் மற்றும் நடத்தை மாற்றத்தை

செயல்படுத்துதல் ஆகிய 2 நோக்கங்களில் இது கவனம் செலுத்தி வருகின்றது.

**32. இந்தியன் வரலாற்று மாநாட்டின் (Indian History Congress) 77வது அமர்வு, எந்த இந்திய மாநிலத்தில் தொடங்கியது ?**

A. தமிழ்நாடு
B. கேரளா
C. கர்நாடகா
D. ஆந்திரப் பிரதேசம்

**விடை: B. கேரளா**

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, 2016 டிசம்பர் 29ம் தேதி கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள கேரளா பல்கலைக்கழகத்தில்(University of Kerala) இந்தியன் வரலாற்று மாநாட்டின்(Indian History Congress) 77வது அமர்வை தொடங்கி வைத்தார். 3,000-க்கும் அதிகமான வரலாற்றாசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் இந்த 3 நாள் அமர்வு மாநாட்டில் கலந்து கொள்வார்கள். IHC என்பது 10,000 க்கும் மேற்பட்ட இந்திய வரலாற்றாளர்களை உறுப்பினர்களாக கொண்ட பெரிய தொழில்முறை மற்றும் கல்வி அமைப்பாகும். இதன் தற்போதைய தலைவராக, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தை(JNU) சேர்ந்த ராதா சாம்பலட்சுமி உள்ளார்.

**33. பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க, இந்தியாவின் முதல் Digi Dhan மேளா எந்த மாநிலத்தில் நடைபெற்றது ?**

A. ஜார்க்கண்ட்
B. உத்தரப் பிரதேசம்
C. ஹரியானா
D. ஒடிசா

**விடை: C. ஹரியானா**

டிஜிட்டல் மற்றும் பணமில்லா பரிமாற்றங்களை ஊக்குவிக்க டிசம்பர் 26, 2016 அன்று இந்தியாவின் முதல் Digi Dhan மேளா ஹரியானாவின் குருகிராமில் நடைபெற்றது. இதில், விற்பனைக்கு வைக்கப்பட்ட எந்த ஒரு பொருளையும் வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் முறையில் மட்டுமே பணம் செலுத்தி பெற இயலும். அன்றாட தினசரி பயன்பாட்டு பொருட்களான காய்கறிகள் முதல் பொது சாமான்கள் வரை, கைவினை பொருட்கள், தோட்டக்கலை பொருட்கள், விதை மற்றும் விவசாயிகளுக்கு உரங்கள் முதலியன இந்த கண்காட்சியில் கிடைக்கும் மற்றும் வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்த வேண்டியிருந்தது. ரொக்கப் பணமாக கொடுப்பதற்கு பதிலாக எவ்வாறு டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தலாம் என்ற வழிமுறையை பொது சேவை மையங்களில் வேலை செய்யக்கூடிய கிராம அளவிலான தொழில் முனைவோர்(VLE), மக்களுக்கு கற்பிக்கின்றனர். அடுத்த டிஜி தண் மேளா, பிளாஸ்டிக் பணத்தை ஊக்குவிக்க டிசம்பர் 29, 2016 அன்று டேராடூனில் ஏற்பாடு செய்யப்படும்.

**34. பின்வரும் யார், புது தில்லியின் புதிய துணைநிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார் ?**

A. விஷ்ணு சகாய்
B. பிரதீப் சின்ஹா
C. கே எம் சந்திரசேகர்
D. அனில் பைஜல்

**விடை: D. அனில் பைஜல்**

1969 தொகுதியின் ஐஏஎஸ் அதிகாரி அனில் பைஜல், புது தில்லியின் புதிய துணைநிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் இப்பதவியை ராஜினாமா செய்த நஜீப் ஜங்கின் இடத்தை இவர் நிரப்புகிறார். பைஜல், அடல் பிஹாரி வாஜ்பாய் அரசாங்கத்தின் கீழ் மத்திய உள்துறை செயலாளராக பணியாற்றியவர். இது தவிர, ஏனைய அமைச்சகங்களின் முக்கிய பதவிகளை வகித்தார்.

**35. சமீபத்தில் மறைந்த பிரபுல்லா ஹல்டன்கர்(Prafulla Haldankar), எந்த விளையாட்டின் புகழ்பெற்ற வீரர் ?**

A. டேபிள் டென்னிஸ்
B. பூப்பந்து
C. மல்யுத்தம்
D. குத்துச்சண்டை

**விடை: A. டேபிள் டென்னிஸ்**

முன்னாள் சர்வதேச டேபிள் டென்னிஸ் வீரர் பிரபுல்லா ஹல்டன்கர்(79), சமீபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் காலமானார். இவர் 1961-62 காலகட்டத்தில் இந்தியாவில் முதல் இடத்தில் இருந்தார் மேலும் இரண்டு ஆசியப் போட்டிகள் மற்றும் இரண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்தியாவை வழி நடத்தினார். விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு,இவர் பல ஆண்டுகளாக இந்திய ரயில்வே பயிற்சியாளராக இருந்தார். மேற்கு ரயில்வேயில் வேலை செய்த இவர், 1995 ஆம் ஆண்டு மும்பை சென்ட்ரலின் டிஆர்எம் அலுவலகத்தில் இருந்து தலைமை நலத்துறை இன்ஸ்பெக்டராக ஓய்வு பெற்றார்.

**36. இந்தியாவில் நடுவர் பொறிமுறையை நிறுவனமயப்படுத்தியதை (institutionalization of arbitration mechanism) ஆய்வு செய்ய, மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட குழு ?**

A. பி என் ஸ்ரீகிருஷ்ணா
B. அராக்ய சென்குப்தா
C. ரவீந்திர பட்
D. இந்து மல்ஹோத்ரா

**விடை: A. பி என் ஸ்ரீகிருஷ்ணா**

இந்திய அரசு (GOI), இந்தியாவில் நடுவர் பொறிமுறையை நிறுவனமயப்படுத்தியதை ஆய்வு செய்ய உயர் நிலை குழுவை(HLC) உருவாக்கியுள்ளது. இக்குழுவிற்கு, உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி

பி என் ஸ்ரீகிருஷ்ணா தலைமை வகிப்பார். நடைமுறையில் உள்ள நடுவர் பொறிமுறை திறனை மதிப்பீடு மற்றும் ஆய்வு செய்தல்,நடுவர் நோக்கங்களுக்காக இந்திய அரசு மூலம் நிதி பெறும் ஏற்கனவே இருக்கும் ADR நிறுவனங்களின் வசதிகள், வளங்கள், நிதி மற்றும் மனிதவளத்தை ஆய்வு செய்தல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு HLC ஆய்வு நடத்தும்.

**37. சமீபத்தில் மறைந்த டெப்பி ரெனால்ட்ஸ்(Debbie Reynolds), எந்த நாட்டின் பழம்பெரும் நடிகை ?**

A. பிரேசில்
B. ஜெர்மனி
C. பிரான்ஸ்
D. கலிபோர்னியா

**விடை: D. கலிபோர்னியா**

ஹாலிவுட் பழம்பெரும் நடிகை டெப்பி ரெனால்ட்ஸ் (84), சமீபத்தில் டிசம்பர் 28ம் தேதி கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸ்-ல் காலமானார். இவர், “The Affairs of Dobie Gillis”, “Bundle of Joy”, “The Catered Affair”, முதலிய கதாபாத்திரங்கள் மூலம் நன்கு அறியப்படுகிறார். ரெனால்ட்ஸ், அவரது மகள் கேரி ஃபிஷர் காலமான அடுத்த நாளே மறைந்தார். கேரி ஃபிஷர் நன்கு அறியப்பட்ட நடிகை, ஆசிரியர் மற்றும் திரைக்கதாசிரியர்,நடிகை கேரி "ஸ்டார் வார்ஸ்" திரைப்பட உரிமையில் நரம்பு, மன உறுதி மற்றும் நம்பிக்கை இணைந்த அரிய இளவரசி லேய்யா என்ற கதாபாத்திரத்தில் மிகவும் அழிக்கமுடியாத பங்கை அளித்தார்.

**38. இந்திய இராணுவம், சிக்கலான தொழில்நுட்ப தேவைகளுக்காக எந்த இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தடன்(IIT) கூட்டு சேர்ந்துள்ளது ?**

A. ஐஐடி பாம்பே
B. ஐஐடி ரூர்க்கி
C. ஐஐடி கான்பூர்

D. ஐஐடி காந்திநகர்

**விடை: D. ஐஐடி காந்திநகர்**

இந்திய இராணுவம், ஐஐடி வளாகத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R & D) மையம் ஒன்றை அமைக்க ஐஐடி காந்திநகருடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்த மையத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள், இந்திய இராணுவ பிரச்சினைகளை அடையாளம் காணும் மற்றும் சாத்தியமான தீர்வுகள் வழங்கும் பணியை செய்வர். மேலும், இந்த ஒப்பந்தம் இந்திய ராணுவத்தின் தொழில்நுட்பம் தேவைகள்,தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப அறிவு பகிர்வு உள்ளிட்ட பகுதிகளில் ஐஐடி மற்றும் இந்திய இராணுவம் இணைந்து செயலாற்ற வைக்கும்.

**39. "Watership Sown" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. ரிச்சர்ட் ஆடம்ஸ்
B. லிலியன் ரோசா
C. ஜார்ஜ் பீடோன்
D. டேல் கார்னகி

**விடை: A. ரிச்சர்ட் ஆடம்ஸ்**

"Watership Sown" என்ற புத்தகம் ரிச்சர்ட் ஆடம்ஸ் என்பவரால் எழுதப்பட்டுள்ளது, இவர் அண்மையில் இங்கிலாந்தில் மறைந்தார். இது ஒரு சஸ்பென்ஸ், சூடான பின்தொடரும், தைரியமிக்க உன்னதமான சாகச நாவல் ஆகும்.

**40. பிரித்விராஜ் அயாச்சி(Prithviraj Ayachi), எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?**

A. குத்துச்சண்டை
B. மல்யுத்தம்
C. பூப்பந்து
D. துப்பாக்கி சுடுதல்

**விடை: D. துப்பாக்கி சுடுதல்**

குஜராத்தை சேர்ந்த பிரித்விராஜ் அயாச்சி, மகாராஷ்டிராவின் புனேவில் நடைபெற்ற தேசிய துப்பாக்கிசுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஜூனியர் ஆண்கள் 50M Rifle Prone நிகழ்வில் தங்க பதக்கம் வென்றுள்ளார். இவர் இறுதி போட்டியில் 209.5 சுட்டு, ரியோ ஒலிம்பிக்கில் தங்க பதக்கம் வென்றவரின் ஸ்கோரை சமன் செய்துள்ளார்.

**41. எந்த குழு, மத்திய அரசிடம் டிஜிட்டல் முறைகளை ஊக்குவிக்க தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது ?**

A. வினோத் ராய் குழு
B. அஜித் சேத் குழு
C. எச் ஆர் கான் குழு
D. ரத்தன் வாட்டல் குழு

**விடை: D. ரத்தன் வாட்டல் குழு**

சமீபத்தில் ரத்தன் வாட்டல் குழு டிஜிட்டல் முறைகளை ஊக்குவிக்க அறிக்கையை மத்திய அரசிடம் சமர்பித்துள்ளது. இக்குழு, பண வழங்கீடு தொடர்பான பிரச்சனைகளை சமாளிக்க ஒரு தனி சீரமைப்பை(Regulator) பரிந்துரைத்துள்ளது. இவ்வறிக்கை டிஜிட்டல் பரிமாற்றங்களை ஊக்குவிக்க நிதிய ஊக்கம் வழங்க பரிந்துரைக்கிறது. டிஜிட்டல் பரிவர்த்தனை மீது அரசு துறைகள் மற்றும் சேவைகள் விதித்த கட்டணங்களை ரத்து செய்யவும், அனைத்து அரசு துறைகள் மற்றும் ஏஜென்சிகளிலும் நுகர்வோருக்கு மின்னனு முறையில் பணம் செலுத்தும் வாய்ப்பை கட்டாயம் வழங்க வேண்டுமென்றும் இக்குழு பரிந்துரை செய்கிறது. மேலும் இந்த அறிக்கை, அடிக்கடி நடைபெறும் குறைந்த மதிப்பு பரிவர்த்தனைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கவும், பணத்தை ஏற்றுக்கொள்ளும் கருவிகள்(payments acceptance equipment) மீதான சுங்க வரியை குறைக்கவும் பரிந்துரைக்கிறது. அத்துடன், டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க விருதுகள் வழங்கவும் பரிந்துரைத்துள்ளது.

**42. டிஜிட்டல் விசாரணை மற்றும் பயிற்சிக்கான இந்தியாவின் முதல் மையத்தை எந்த மாநில காவல்துறை அமைத்துள்ளது ?**

A. கேரளா
B. ஹரியானா
C. கர்நாடகா
D. தமிழ்நாடு

**விடை: B. ஹரியானா**

சமூக ஊடக கருத்தை கண்காணிக்க மற்றும் சைபர் காவல்துறையை அதிகரிக்க, ஹரியானா மாநில காவல்துறை டிஜிட்டல் விசாரணை மற்றும் பயிற்சிக்கான இந்தியாவின் முதல் மையத்தை தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NTRO) இணைந்து குர்கானில் அமைத்து வருகிறது. தேர்வு செய்யப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி அளிப்பது தவிர, சமூக ஊடகங்களில் முக்கியமான மற்றும் ஆத்திரமூட்டும் கருத்துக்களின் மீதும் இம்மையம் கவனம் வைக்கும். ஹரியானா போலீசாரின் தொழில்நுட்ப திறன்களை அதிகரிக்க, ஒரு சமூக ஊடக கண்காணிப்பு ஆய்வகமும் இந்த மையத்தில் உள்ளது. NTRO மற்றும் இந்திய அரசின் தொழில்நுட்ப வல்லுனர்கள் பயிற்சியின் ஆதரவை நீட்டிப்பார்கள்.

**43. இந்தியாவின் முதல் கேட்டர்பில்லர் ரயில்(Caterpillar train), எந்த மாநில அரசு மூலம் நிறுவப்படவுள்ளது ?**

A. அசாம்
B. உத்தரப் பிரதேசம்
C. ஹரியானா
D. ராஜஸ்தான்

**விடை: C. ஹரியானா**

ஹரியானா அரசு, பைலட் நடைபாதையில் 'கேட்டர்பில்லர் ரயில் (அல்லது C-ரயில்)' எனும் புதுமையான ஒன்றை அமைக்கவுள்ளது, இது குர்கான் நகரில்,

நகரின் போக்குவரத்தின் மீது பறந்து செல்லும். வளைவுகளாக பிரிந்த துருவங்களின் துணையுடன் கம்பங்கள் தாங்கிய பாதையில் சுமார் 100 கிலோமீட்டர் வேகத்தில் நகரம் முழுவதும் இயங்கும் இலகுரக, உயர்ந்த இரயில் பெட்டிகளை கொண்ட நெட்வொர்க் இந்த சி-ரயிலில் அடங்கும். தொடக்க அமைப்பிற்கு ஆகும் செலவு $3 மில்லியன் மற்றும் முழுமையான தானியங்கி அமைப்பிற்கு ஏறத்தாழ $20 மில்லியன் செலவாகும். சி-ரயில் கோட்பாடு, எமில் ஜேக்கப்புடன் இணைந்து இந்திய ரயில்வே பொறியாளர் அஸ்வினி குமார் உபாத்யாயா மூலம் உருவாக்கப்பட்டது. இந்த புதுமையான யோசனைக்காக அமெரிக்காவில் 2016-ல் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் (MIT) உலக விருதினை வென்றனர்.

**44. டிஜிட்டல் பரிமாற்றங்களை எளிதாக செய்ய மத்திய அரசு, "BHIM" மொபைல் பயன்பாட்டை அறிமுகம் செய்துள்ளது. "BHIM" என்பதன் விரிவாக்கம் என்ன ?**

A. Build Interface for Money

B. Built-up Interface for Money

C. Bi-aural Interface for Money

D. Bharat Interface for Money

**விடை: D. Bharat Interface for Money**

எளிதாக டிஜிட்டல் பணவழங்கீடு செய்ய மற்றும் பரிமாற்றங்களை ஊக்குவிக்க, புது தில்லியின் தல்கதோரா மைதானத்தில் நடைபெற்ற டிஜி தண் கும்ப மேளாவில் பிரதமர் நரேந்திர மோடி, ஆதார் அடிப்படையிலான "Bharat Interface for Money (BHIM)" மொபைல் பயன்பாட்டை அறிமுகப்படுத்தினார். டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் நினைவாக பயன்பாட்டிற்கு BHIM என பெயரிடப்பட்டது மற்றும் சிறு வணிகர்கள், பழங்குடியினர், விவசாயிகளுக்கு இது அதிகாரமளிக்கும். இப்பயன்பாடு, Unified Payments Interface (UPI) இடையே செயல்படத்தக்க வகையில் பயனர்களின் வங்கி கணக்கை நேரடியாக இணைக்கிறது. இப்பயன்பாடு, National Payment Corporation of India (NPCI) மூலம் உருவாக்கப்பட்டது. வங்கி இருப்பை நேரடியாக பார்க்க இந்த பயன்பாடு அனுமதிக்கிறது. பரிவர்த்தனை ஒன்றுக்கு ரூ .10,000 வரம்பு மற்றும் 24 மணி நேரத்திற்கு ரூ 20,000 வரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

**45. 2016 உலக போஜ்புரி மாநாடு(World Bhojpuri Conference), பின்வரும் எந்த நகரத்தில் தொடங்கியுள்ளது ?**

A. ஜெய்ப்பூர்
B. அகமதாபாத்
C. வாரணாசி
D. போபால்

**விடை: C. வாரணாசி**

இந்தியாவில் ஒரு காலத்தில் போஜ்புரி மொழி பேசும் பெல்ட்டை சேர்ந்தவர்களாக இருந்து பின்னர் உலகின் பல்வேறு பகுதிகளில் புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளி மக்களிடையே இணைப்புகளை வலுப்படுத்த டிசம்பர் 29ம் தேதி உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் 2016 உலக போஜ்புரி மாநாடு தொடங்கியது. 4 நாள் மாநாடு கலாச்சாரம், மதம், மொழி, மற்ற வணிக பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும், இதில் 18க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும். மாநாட்டின் போது 'போஜ்புரி ரத்னா' விருது மற்றும் 'உலக போஜ்புரி கர்மயோகி' விருதுகள் 25 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

**46. பீகார் கிராமப்புற சாலை திட்டங்களுக்காக, உலக வங்கி எவ்வளவு கடன் தொகைக்கு ஒப்புதல் அளித்துள்ளது?**

A. $ 245 மில்லியன்
B. $ 235 மில்லியன்
C. $ 255 மில்லியன்
D. $ 265 மில்லியன்

**விடை: B. $ 235 மில்லியன்**

சமீபத்தில் உலக வங்கி (WB), பீகார் மாநிலத்தின் கிராமப்புற சாலை நெட்வொர்க்கை மேம்படுத்த மற்றும் திறம்பட நிர்வகிக்க, பீகார் கிராம சாலைகள் திட்டத்திற்கு $ 235 மில்லியன் கடன் ஒப்புதல் அளித்துள்ளது.

முக்கிய மந்திரி கிராம சம்பார்க் யோஜனாவின்(MMGSY) கீழ், சுமார் 2,500 கி.மீ கிராமிய வீதிகளின் கட்டுமானத்திற்கு இந்த திட்டம் ஆதரவளிக்கும். சாலைகள், குறைந்த செலவு வடிவமைப்புகளை பயன்படுத்தி அமைக்கப்படும் மற்றும் சாலை பாதுகாப்பை உறுதி செய்ய பொறியியல் அளவீடுகளை கணக்கில் கொள்ளும். அதிக நேரம் மற்றும் அதிக செலவை தவிர்க்க, சிறந்த ஒப்பந்த மேலாண்மை நடைமுறைகளை இத்திட்டம் பரிந்துரைக்கும். உலக வங்கியின் சலுகை பெறும் கிளையான, 5 ஆண்டு கருணை காலம் உட்பட 25 ஆண்டுகள் முதிர்ச்சி காலம் கொண்ட சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடம் (ஐடிஏ) இருந்து இந்த கடன் கிடைக்கிறது.

**47. "That thing called love" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டுள்ளது ?**

A. அஸ்வின் சங்கி
B. அரவிந்த் அடிகா
C. விக்ரம் சேத்
D. துஹின் சின்ஹா

**விடை: D. துஹின் சின்ஹா**

சிறந்த விற்பனை ஆசிரியர் மற்றும் விமர்சகர் துஹின் சின்ஹாவால் "That thing called love" என்ற புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்போதைய நகர்ப்புற சமுதாயத்தில் உறவுகளை சாதாரணப்படுத்துதலை புத்தகம் ஆராய்கிறது. ஆசிரியரின் பெயர் சமீபத்திய செய்திகளில் வரக்காரணம், இவர் பாரதிய ஜனதா கட்சியின்(BJP) மும்பை பகுதியின் புதிய பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**48. சமீபத்தில் மறைந்த பார்பரா தர்பக்(Barbara Tarbuck), எந்த நாட்டின் புகழ்பெற்ற நடிகை ?**

A. சீனா
B. பிரான்ஸ்
C. அமெரிக்கா
D. ஜெர்மனி

**விடை: C. அமெரிக்கா**

"Lady Jane Jacks" என்ற கதாபாத்திரம் மூலம் நன்கு அறியப்பட்ட நடிகை பார்பரா தர்பக்(74), சமீபத்தில் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பொது மருத்துவமனையில் காலமானார்.

**49. உலகின் மிக உயர்ந்த பாலமான "Beipanjiang Bridge", எந்த நாட்டில் உள்ளது ?**

A. சீனா
B. பிரான்ஸ்
C. ஜப்பான்
D. ஜெர்மனி

**விடை: A. சீனா**

உலகின் மிக உயர்ந்த பாலமான "Beipanjiang Bridge" சீனாவில் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டது. பாலமானது, ஆற்றின் கீழிருந்து 565 மீட்டர் (1,854 அடி) உயரத்தில் உள்ளது. மேலும், Yunnan மற்றும் Guizhou ஆகிய இரண்டு மலை மாகாணங்களை இணைக்கிறது. Liupanshui-ல் இருந்து Xuianwei செல்லும் சாலைப் பயண நேரத்தை 4 மணி நேரத்தில் இருந்து 2 மணி நேரமாக இப்பாலம் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய சீன மாகாணத்தில் உள்ள Si Du நதிப்பாலத்தின் உயரத்தினை முந்திசென்று, உலகின் மிக உயர்ந்த பாலம் என்ற பெயரை இது எடுத்துள்ளது.

**50. தேசிய அறக்கட்டளை நிறுவன நாள் (National Trust Foundation Day), இந்தியாவில் எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. டிசம்பர் 28
B. டிசம்பர் 31
C. டிசம்பர் 29
D. டிசம்பர் 30

**விடை: D. டிசம்பர் 30**

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தவார்சந்த் கெக்லாட், சமீபத்தில் டிசம்பர் 30ம் தேதி "2016 தேசிய அறக்கட்டளை நிறுவன நாளை (NTFD)" குறிக்கும் வகையில் தேசிய அறக்கட்டளையின் 'மொபைல் பயன்பாடு மற்றும் பேஸ்புக் பக்கத்தை' அறிமுகம் செய்து வைத்தார். சமூகத்தின் அணுகமுடியாத பிரிவை உணர்வூட்டுவதன் மூலம் ஊனமுற்ற நபர்களுக்கு ஆதரவு வலையமைப்பு உருவாக்க "Celebrating Inclusion" என்ற தலைப்பில் 2016 NTFD அனுசரிக்கப்பட்டது. தேசிய அறக்கட்டளை என்பது இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் சட்டபூர்வமான அமைப்பு, "National Trust for the Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities" Act (Act 44 of 1999)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விதி டிசம்பர் 30, 1999 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனவே, ஆட்டிசம், பெருமூளை வாதம், குறைந்த மூளைத்திறன் மற்றும் பல ஊனமுற்ற நபர்களின் நலனுக்காக விழிப்புணர்வை உருவாக்க இந்தியாவில் டிசம்பர் 30ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் NTFD அனுசரிக்கப்படுகிறது.

**51. யார் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

A. S R Hashim

B. Deepak Gupta

C. Alka Sirohi

D. David Syiemlieh

**விடை: D. David Syiemlieh**

பேராசிரியர் D. David Syiemlieh மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மேகாலயா மாநிலத்தை சார்ந்தவர் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராக இருந்துள்ளார். ஜனவரி 4, 2017 அன்று பதிவி ஏற்க உள்ளார். ஜனவரி 21, 2018 வரை தலைவராக செயல்படுவார். இவர் மத்திய பிரதேசத்தை சார்ந்த ஓய்வு பெற்ற IAS அதிகாரியான அல்க ஷிரோகிக்கு அடுத்து மத்திய பணியாளர் தேர்வாணையத்திற்கு தலைவராக பதவி ஏற்கிறார்.

**52. இங்கிலாந்து ராணி Queen Elizabeth II அவர்களால் Knighthood பட்டம் பெறும் இந்திய வம்சாவளியை சார்ந்த பிரிட்டிஷ் பேராசிரியர் யார்?**

A. Nandini Koel
B. Kamaldeep Begol
C. Shankar Balasubramanian
D. Mandeep Singh Bhui

**விடை: C. Shankar Balasubramanian (சங்கர் பாலசுப்ரமணியம்)**

இங்கிலாந்தில் வாழும் இந்திய வம்சாவளியை சேர்ந்த பேராசிரியர் சங்கர் பாலசுப்ரமணியம் கேம்ப்ரிட்ச் கல்லூரியில் வேதியியல் மற்றும் DNA துறையில் வல்லுனராக உள்ளார். இவர் இங்கிலாந்து ராணி Queen Elizabeth II அவர்களால் Knighthood பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகிறார். இவர் நிலையை மாற்றக்கூடிய அடுத்த தலைமுறைக்கான DNA வரிசை முறையை கண்டுபிடித்துள்ளார். இது உயிரியல் மற்றும் மருந்து துறையில் மேம்பட்ட ஒன்றாக இருக்கும்.

**53. பின்வரும் யார் பாகிஸ்தான் நாட்டின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை நீதிபதி?**

A. Nasir-ul-Mulk
B. Mian Saqib Nisar
C. Jawwad S. Khawaja
D. Anwar Zaheer Jamali

**விடை: B. Mian Saqib Nisar (மியன் சாகிப் நிசார்)**

நீதிபதி Mian Saqib Nisar (மியன் சாகிப் நிசார்) பாகிஸ்தான் நாட்டின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை நீதிபதி ஆவார். இதற்கு முன்னர் லாகூர் உயர்

நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றினார். முன்னாள் தலைமை நீதிபதி அன்வர் ஜாகிர் ஜமாளிக்கு அடுத்து பதவி ஏற்க உள்ளார்.

**54. பின்வரும் எந்த மாநிலத்தில் Bargarh Dhanua Jatra என்ற திருவிழா தொடங்கியது?**

A. ஒடிசா
B. கேரளா
C. அசாம்
D. மணிப்பூர்

**விடை: A. ஒடிசா**

உலகப்புகழ்பெற்ற Bargarh Dhanua Jatra என்ற திருவிழா மேற்கு ஓடிஸா பகுதியில் உள்ள Bargarh என்ற இடத்தில் தொடங்கியது. எல்லா சடங்குகளும் சமலேஸ்வரி கடவுளுக்காக நடத்தப்படுகின்றன. 11 நாட்கள் நடைபெறும் இந்த விழாவானது கடவுள் கிருஷ்ணர் தொடர்பான புராணங்கள் சம்பந்தப்பட்ட பண்டைய நகர கொண்டாடப்படுகிறது. Bargarh, மதுராநகரி மற்றும் அம்பபள்ளி பகுதியில் கோபபூர் என்ற இடமானது கிருஷ்ணாவின் பிறப்பிடமாக அறியப்படுகிறது. ஜீரா நதி என்றழைக்கப்படும் யமுனா நதி பகுதி மற்றும் ஹடபட மண்டபத்தில் கன்ச மன்னனின் ராஜ தர்பார் நடந்துள்ளது. தனு ஜாத்ரா என்ற நாடகம் சார்ந்த திறந்தவெளி திரையரங்கு நிகழ்ச்சி Bargarh நகராட்சி சுற்றி ஒரு 6 கி.மீ. சுற்றளவில் கொண்டாடப்படுகிறது. இது உலகிலேயே மிகப்பெரிய திறந்தவெளி திரையரங்க நிகழ்ச்சியாக கருதப்படுகிறது.

**55. “scatterd soules” என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?**

A. Basharat Pee
B. Fazlur Rahman

C. Agha Shahid Ali
D. Shahnaj Bashir

**விடை: D. Shahnaj Bashir**

Shahnaj Bashir என்பவரால் “scatterd soules” என்ற புத்தகம் எழுதப்பட்டது. இது காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழ்க்கையை இழந்த மற்றும் இறந்தவர்களின் கதையை சொல்லும் வலிமை மிகுந்த கதைகளின் தொகுப்பு புத்தகமாகும்.

**56. பணமில்லா பரிமாற்றங்களை ஊக்குவிக்க இந்திய அரசால் வழங்கப்படும் Scroll of Honor என்ற விருதை பெற்றவர் யார்?**

A. Manish Jadon
B. Khusbu Gupta
C. Surbhi Kapoor
D. Gaurav Goyal

**விடை: D. Gaurav Goyal**

**Gaurav Goyal** அஜ்மீர் மாவட்டத்தின் ஆட்சியாளராக பணியாற்றி வருகிறார். இவர் பிரதமர் நரேந்தர மோடி அவர்களால் டெல்லியில் நடைபெற்ற விழாவில் அஜ்மீர் மாவட்டத்தில் பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவித்ததற்காக Scroll of Honor என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இந்த விருதானது பணநீக்கம் நடைபெற்ற பிறகு சட்ட ஒழுங்கு பாதிக்காத வகையில் பணமில்லா பரிவர்த்தனையை மிகுதியாக ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்காக கொடுக்கப்பட்டது. இந்திய தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் நிதி ஆயோகினால் இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது. அஜ்மீரானது பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவித்த சிறந்த 5 மாவட்டங்களில் முன்னிலை வகிக்கிறது.

**57. இந்திய ஹஜ் குழு Haj Committee of India (HCoI) எந்த அமைச்சகத்தின் கீழ் வருகிறது?**

A. உள்துறை அமைச்சகம்
B. சிறுபான்மையினர் விவகார அமைச்சகம்
C. தனியார், பொது குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம்
D. சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம்

**விடை: B. சிறுபான்மையினர் விவகார அமைச்சகம்**

இந்திய ஹஜ் குழு Haj Committee of India சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தின் கீழ் Haj Committee act 2002 (act 35 of 2002) என்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவில் உள்ள இஸ்லாமிய மதத்தினரை சார்ந்தவர்கள் ஹஜ் புனித யாத்திரை செல்ல ஏற்பாடு செய்து கொடுக்கிறது. சமீபத்தில் மத்திய சிறுபான்மையினர் விவகார அமைச்சர் மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி இந்திய ஹஜ் குழுவிற்காக புதிய மொபைல் செயலியை மும்பையில் வெளியிட்டார். இது 2017ல் புனித யாத்திரைசெல்வோருக்கு முற்றிலும் வெளிப்படை தன்மையான சேவைகளை ஊக்குவிக்கவும் ஆன்லைன் விண்ணப்பங்களை மேற்கொள்ளவும் உருவாக்கப்பட்டது. மொபைல் செயலியின் மூலம் விண்ணப்பித்தல், விசாரணை மேற்கொள்ளுதல், தகவல் அறிதல், மற்றும் மின்னணு பரிவர்த்தனை போற்றவற்றை செய்ய முடியும்.

**58. பின்வரும் எந்த மாநிலங்கள் "மாநில குடியிருப்போர் தரவு தளம்" அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன?**

A. அரியானா மற்றும் அசாம்
B. மகாராஷ்ட்ரா மற்றும் ஆந்திர பிரதேசம்
C. ஹரியானா மற்றும் ஆந்திரப் பிரதேசம்
D. மகாராஷ்டிரா மற்றும் அசாம்

**விடை: C. ஹரியானா மற்றும் ஆந்திரப் பிரதேசம்**

சமீபத்தில் ஹரியானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்கள் "மாநில குடியிருப்போர் தரவு தளம்" அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த தரவுகளின் மூலம் அரசு நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்திட முடியும்.

**59. சமீபத்தில் காலமான பழம்பெரும் டிஸ்னி கலைஞர் Tyrus Wong எந்த நாட்டை சார்ந்தவர்?**

A. Germany

B. France

C. United States

D. United Kingdom

**விடை: C. United States**

அமெரிக்காவை சார்ந்த பழம்பெரும் டிஸ்னி கலைஞர் Tyrus Wong(106) சமீபத்தில் காலமானார். இவர் வால்ட் டிஸ்னியின் கதாபாத்திரமான பாம்பி(bambi) என்ற சித்திரத்தால் நன்கு அறியப்பட்டவர். இவர் சீனாவில் பிறந்த அமெரிக்க சித்திர கலைஞர். இவரின் துடிப்பான ஓவியங்கள் வால்ட் டிஸ்னியின் கண்களில்பட்டு இவரை திரைப்பட துறையில் வாய்ப்பளித்தார்.

**60. சமீபத்தில் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் செயலராக நியமிக்கப்பட்டவர் யார்?**

A. அனூப் ஸ்ரீவத்சவா

B. சஞ்சீவனி குட்டி

C. சுஷில் குமார் செய்தல்

D. சீமா பகுகுணா

**விடை: A. அனூப் ஸ்ரீவத்சவா**

அனுப் குமார் ஸ்ரீவத்சவா, அசாம்-மேகாலயா பகுதியை சார்ந்த 1981 வருட ஐஏஎஸ் அதிகாரி ஆவார். இவர் தற்போது பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் இதே அமைச்சகத்தின் கீழ் சிறப்பு அதிகாரியாக பணியாற்றி உள்ளார்.

**61. நிர்வாக பணியாளர் கல்லூரியின் Administrative Staff College of India (ASCI) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

A. ஹைதெராபாத்
B. புது தில்லி
C. புனே
D. சென்னை

**விடை: A. ஹைதெராபாத்**

சமீபத்தில் ஹைதெராபாத்தில் உள்ள பெல்லா விஸ்த என்ற இடத்தில் நடைபெற்ற விழாவில்,1976 ஆம் ஆண்டை சேர்ந்த IAS அதிகாரியான ராஜன் ஹபீப் க்வாஜா நிர்வாக பணியாளர் கல்லூரி தலைமையகத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். பிப்ரவரி 2014ல் இருந்து சுற்றுலாத் துறை மற்றும் சுரங்கங்க துறை அமைச்சகத்தின் செயலாளராக இருந்துள்ளார். மேலும் சிங்கரேனி நிலக்கரி கம்பெனி லிமிடெட் (SCCL) நிறுவனத்தின் மேலாளர் என பல முக்கிய பதவிகளை வகித்தவர். ASCI ஆனது 1956 இருந்து செயல்பட்டுவரும் மேலாளர் பயற்சி நிறுவனமாகும் இதன் தலைமையகம் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் அமைந்து உள்ளது

**62. தேசிய விளையாட்டு குறியீடுகளை (NSDC) மேம்படுத்த மத்திய அரசின் பரிந்துரையின் கீழ் அமைக்கப்பட்ட குழு எது?**

A. சதீஷ் குமார் குழு
B. இன்ஜெடி ஸ்ரீனிவாஸ் குழு
C. என் எம் சின்ஹா குழு
D. கே எஸ் ரத்தோர் குழு

**விடை: B. இன்ஜெடி ஸ்ரீனிவாஸ் குழு**

தேசிய விளையாட்டு மேம்பாட்டு குறியீடு(NSDC) மற்றும் இந்திய விளையாட்டு கூட்டமைப்பு செயல்பாடுகளை மேம்படுத்த இளைஞர் விவகார அமைச்சகம் சார்பில் குழுவினை மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. இதன் தற்போதைய தலைவர் இன்ஜெடி ஸ்ரீனிவாஸ். இதன் கலந்துரையாடலில் மேம்பாடுகள் குறித்த பரிந்துரைகள் மற்றும் கருத்துகளின் ஆவண அடிப்படையில் மேம்பாடுத்த உள்ளது. இக்குழு விளையாட்டு அமைப்புகள் குறித்த பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கபடுகிறது

**63. "என்.டி.ஆர் ஆரோக்கிய ரக்ஷா" என்ற புதிய சுகாதார திட்டம் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?**

A. அரியானா
B. ஒடிசா
C. கர்நாடகா
D. ஆந்திரப் பிரதேசம்

**விடை: D.ஆந்திரப் பிரதேசம்**

ஆந்திரப் பிரதேசம் அரசு விஜயவாடாவில் சமீபத்தில் "என்டிஆர் ஆரோக்கிய ரக்ஷா" எனும் புதிய சுகாதார திட்டத்தை நடைமுறைபடுத்தியுள்ளது. இத்திட்டத்தில் மாநில அரசால் காப்பீடு எடுக்காதவர்களை தவிர மற்ற அனைவருக்கும் பொருந்துமாறு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வறுமை கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 1200 செலவில் மருத்துவ சிகிச்சையும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 2 லட்சம் என மாநிலத்தில் உள்ள 432 மருத்துவ நிறுவனங்கள் மூலம் இலவச சிகிச்சை அளிக்கபடவுள்ளது

**64. 104 வது இந்திய அறிவியல் மாநாடு எந்த மாநிலத்தில் தொடங்கியது?**

A. கேரளா
B. அசாம்
C. ஆந்திரப் பிரதேசம்
D. மணிப்பூர்

**விடை: C. ஆந்திரப் பிரதேசம்**

ஆந்திரப் பிரதேசத்தில் 104 வது இந்திய அறிவியல் மாநாடை பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 3, 2017 அன்று திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைத்தார். 5 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் குறிக்கோளானது "தேசிய முன்னேற்றத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்" என்பதாகும்.

**65. இந்தியாவின் முதல் லேசர் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பட்ட Automatic Vehicle Monitoring System(AVMS) சோதனை சாவடி எந்த மாநிலதில் அமைக்கப்படவுள்ளது?**

A. குஜராத்
B. மத்தியப் பிரதேசம்
C. ராஜஸ்தான்
D. பஞ்சாப்

**விடை: A.குஜராத்**

இந்தியாவின் முதல் லேசர் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பட்ட தானியங்கி கண்காணிப்பு அமைப்பு (AVMS) ஆரவல்லி மாவட்டத்தில் ***ஷாம்லாஜி*** பகுதியில் அமைக்கப்படவுள்ளது. சோதனை சாவடி மேம்பட்ட லேசர் கதிர் தொழில்நுட்பம் மூலம் ரூ 4.72 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது.

முறைகேடுகள் மற்றும் தேவையற்ற தலையீடுகளை அகற்ற இது உதவும். AVMS மூலம் வெளிப்படையான சில முக்கிய தீர்வுகள் அரசாங்கத்திற்கு வழங்கப்படும்.

**66. சமீபத்தில் தலைமை கணக்கு கட்டுபாட்டாளராக(Controller General of Accounts) நியமிக்கப்பட்டவர் யார்?**

A. எஸ் எஸ் சாகு
B. அர்ச்சனா நிகாம்
C. சுஷில் சிங்
D. எம் ஜே ஜோசப்

**விடை: B. அர்ச்சனா நிகாம்**

இந்திய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் செலவினத்துறையின் புதிய தலைமை கணக்கு கட்டுபாட்டாளராக 1981 ம் ஆண்டு பிரிவை சார்ந்த அர்ச்சனா நிகாம் என்ற இந்திய இந்திய குடிமை மற்றும் கணக்கு துறை(Indian Civil Accounts Service) அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் M.J.Joseph என்பர் இப்பதவியில் இருந்தார். அர்ச்சனா நிகாம் 2017இல் அரசால் மேற்கொள்ளப்பட்ட GST சார்ந்த கட்டமைப்பை மேற்கொள்வதில் முக்கிய பங்காற்றினார்.

**67. 2016 ஆண்டிற்கான முபாதாலா உலக கோப்பை டென்னிஸ் சாம்பியன்ஷிப்யை வென்றது யார்?**

A. Kevin Anderson
B. Stan Wawrinka
C. Milos Raonic

D. Rafael Nadal

**விடை: D. Rafael Nadal (ரபேல் நாடால்)**

ரபேல் நடால் ஸ்பானிஷ் நாட்டை சார்ந்த தொழில்முறை டென்னிஸ் வீரர். இவர் 2016 ஆண்டிற்கான முபாதாலா உலக கோப்பை டென்னிஸ் சாம்பியன்ஷிப்யை வென்றுள்ளார். ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள அபுதாபி சர்வதேச டென்னிஸ் வளாகத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 6-4 மற்றும் 7-6 என்ற நேர் கணக்கில் டேவிட் கோஃபின் என்பவரை தோற்கடித்து கோப்பையை கைப்பற்றினார். முபாதாலா உலக டென்னிஸ் சாம்பியன்ஷிப் 8 வது முறையாக நடைபெறும் உலகின் முன்னணி வீரர்கள் கலந்து கொள்ளும் நாக் அவுட் முறை போட்டியாகும். இதில் வெற்றி பெறுபவர் $250,000 பரிசு தொகை பெறுவார்.

**68. சமீபத்தில் காலமான இம்தியாஸ் அகமது என்ற கிரிக்கெட் வீரர் எந்த நாட்டை சார்ந்தவர்?**

A. இந்தியா
B. பங்களாதேஷ்
C. பாகிஸ்தான்
D. தென்ஆப்பிரிக்கா

**விடை: C. பாகிஸ்தான்**

இம்தியாஸ் அகமது(வயது 88) என்ற பாகிஸ்தான் நாட்டை சார்ந்த கிரிக்கெட் வீரர் சமீபத்தில் லாகூரில் காலமானார். இவர் தனது அதிரடி ஆட்டத்தின்

மூலம் வெகுவாக கவரப்பட்டவர். பக்க ஆட்டம், ஹூக் மற்றும் தடுப்பு ஆட்டத்தில் வல்லவராக இருந்தார். மேலும் 1955ல் லாகூரில் நியூசிலாந்து அணிக்கு எதிராக 209 எடுத்ததே இவரின் சிறந்த ஆட்டமாகும். டெஸ்ட் போட்டிகளில் 2,079 ரன்கள் குவித்துள்ளார். இவரின் இறப்பின் மூலம் பாகிஸ்தான் அணி இந்தியாவில் 1952-53 ஆண்டில் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய போது இருந்த வீரர்களில் லண்டனில் வசிக்கும் முன்னாள் வீரர் வக்கார் ஹசன் மட்டுமே உயிருடன் உள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**69. சமீபத்தில் காலமான புகழ்பெற்ற எழுத்தாளர் ஜான் பெர்கர் எந்த நாட்டை சார்ந்தவர்?**

A. இங்கிலாந்து
B. ஜெர்மனி
C. அமெரிக்கா
D. மலேசியா

**விடை: A. இங்கிலாந்து**

இங்கிலாந்து நாட்டை சார்ந்த மாபெரும் கலை விமர்சகர் மற்றும் எழுத்தாளர் ஜான் பெர்கர் சமீபத்தில் பாரிஸ், பிரான்சில் காலமானார். “Ways of seeking” என்ற BBC தொடரின் மூலம் நன்கு அறியப்பட்டவர். இது மேற்கத்திய கலாச்சார அழகியல் பற்றி விரிவாக எடுத்துரைத்தது. மேலும் இவரின் “ஜி” என்ற நாவல் மேன் புக்கர் பரிசு வென்றுள்ளது. இதில் கிடைத்த பரிசு தொகையின் பாதியை ஆப்பிரிக்க-அமெரிக்க தீவிரவாத இயக்கம் சார்ந்தவற்றிற்கு நன்கொடையாக வழங்கினார். இவர் வடக்கு லண்டனில் உள்ள hackney பகுதியில் பிறந்து ஒரு ஓவியராக தன் வாழ்க்கையைத் தொடங்கினார்.

70. "Just Another Jihadi Jane" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?

A. ஆனந்த் பத்மநாபன்
B. கனிஷ்கா குப்தா
C. மிட்டா கபூர்
D. தபிஷ் கைர்

விடை: D. தபிஷ் கைர்(tabish khair)

டென்மார்க்கை சார்ந்த இந்திய ஆங்கில எழுத்தாளர் தபிஷ் கைர் என்பவரால் "Just Another Jihadi Jane" என்ற புத்தகம் எழுதப்பட்டது. இந்த நாவலானது இஸ்லாம் தீவிரவாதமாதலின் உள்ளே உள்ள நட்பு, நம்பிக்கை மற்றும் அன்னியப்படுத்தப்பட்ட கதைகளை விவரிக்கின்றது. இது கொலைகார ஆட்சி பகுதியில் வாழும் பாதிக்கப்பட்ட புதிய தலைமுறையினருக்கு வீரம் மற்றும் தியாகமானது மோதலின் ஒரு பக்கத்தில் மட்டுமே அல்ல என்பதை நினைவூட்டுகிறது.

71. இந்தியாவின் தற்போதைய புதிய தலைமை நீதிபதி யார்?

A. ஜே.எஸ். கேஹர்
B. மதன் லோகர்
C. கமலேஷ் கேல்கர்
D. தி.எஸ்.பதில்

விடை: A. ஜே.எஸ். கேஹர்

ஜெகதீஷ் சிங் கேஹர், உச்ச நீதிமன்றத்தில் NJAC சட்டத்தின் சரத்தினை உருவாக்கிய ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கு தலைமை தாங்கிய நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் 44-வது உச்ச நீதிமன்ற

நீதிபதியாக நியமிக்கபட்டுள்ளார். இவர் சிக்கிய மதத்தை சார்ந்தவர். இதற்கு முன்னர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக தாக்கூர் இருந்தார்.

**72. உலகில் முதல் முறையாக எந்த நாடு தானாக முன்வந்து தன்நாட்டு மக்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் கொடுக்கிறது?**

A. இந்தோனேஷியா
B. பின்லாந்து
C. பிரான்ஸ்
D. இலங்கை

**விடை: B. பின்லாந்து**

உலகில் முதல் முறையாக தானாக முன்வந்து தன்நாட்டு மக்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் வழங்குவதில் பின்லாந்து முதன்மை வகிக்கிறது. இதன் நோக்கமானது இன்னும் இரண்டு வருடத்தில் வறுமை ஒழிப்பையும் மற்றும் திறனை அதிகரித்து வேலைக்கு செல்வதை ஊக்குவிக்கவும் முடிவு செய்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 25-58 வயதிற்குட்பட்ட சுமார் 2000 வேலை அற்ற நபர்களுக்கு வேலை கிடைக்கும் வரை €560 கொடுக்க முன்வந்துள்ளது.

**73. உலக பிரெயிலி நாள் (WBD) எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது?**

A. ஜனவரி 3
B. ஜனவரி 5
C. ஜனவரி 2
D ஜனவரி 4

**விடை: D ஜனவரி 4**

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 4 பிரெயிலி நாளாக கடைபிடிக்கபடுகிறது. 1821 இல் பிரெயில் குறியீடு லூயி பிரெயில் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பிரஞ்சு கல்வியாளர் லூயி பிரெயில் பிறந்த ஆண்டு நினைவாக

அனுசரிக்கப்படுகிறது. பார்வை அற்றோர்களுக்கு உதவும் வண்ணம் பிரெயில் குறியீடு வடிவமைக்கபட்டுள்ளது.

**74. சமீபத்தில் காலமானா ஹெச் எஸ் மகாதேவா பிரசாத் எந்த சட்டமன்ற தொகுதியில் உறுப்பினர் ஆவார்?**

A. தார்வாட்
B. சிக்கோடி
C. பாகல்கோட்
D. குண்ட்லேபெட்

**விடை: D. குண்ட்லேபெட்**

கர்நாடக மாநிலத்தை சார்ந்த ஹலஹல்லி ஸ்ரீகந்த செட்டி மகாதேவ பிரசாத் கர்நாடக கூட்டுறவு மற்றும் சர்க்கரை துறை அமைச்சராக பணிபுரிந்துள்ளார். சமரஜநகர் மாவட்டத்தில் குண்ட்லேபெட் தொகுதியிலிருந்து 5 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**75. 2016 உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார் யார்?**

A. செர்ஜி கர்ஜகின்
B. அண்ணா முழ்ய்சுக்
C. மேக்னஸ் கார்ல்சன்
D. டானியல் துபாய்

**விடை: A. செர்ஜி கர்ஜகின்**

ரஷ்ய நாட்டை சார்ந்த செர்ஜி கர்ஜகின், டோஹவில் நடந்த 2016 ஆண்டுக்கான உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டத்தை வென்றுள்ளார். கர்ஜகின் பெற்ற முதல் பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் இது என்பது குறிப்பிடத்தக்கது. கால்இறுதி சுற்றில் நார்வே நாட்டை சேர்ந்த மக்னஸ் கார்ல்சென் என்பவரை டை பிரேக்கில் சுற்றில் முறியடித்தார்.

**76. சமீபத்தில் காலமான அரசியல்வாதியான K.V பூஸா எந்த மாநிலத்தை சார்ந்தவர்?**

A. மணிப்பூர்
B. அருணாசலப் பிரதேசம்
C. திரிபுரா
D. நாகாலாந்து

**விடை: D. நாகாலாந்து**

காங்கிரசின் மூத்த தலைவர் மற்றும் நாகலாந்து காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் K.V பூஸா சமீபத்தில் நாகலாந்து தலைநகர் கோஹிமாவில் காலமானார். இவர் அரசியலில் வாழ்க்கையை தவிர்த்து பல்வேறு வகையான மாணவர்கள், விவசாயிகள், மற்றும் விளையாட்டு சார்ந்த அமைப்பிற்கு தலைமை தாங்கியுள்ளார். மேலும் கோஹிமாவில் உள்ள Mezhur மேல்நிலைப்பள்ளியின் தலைவராகவும் மற்றும் நாகாலாந்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகிப்பாளர்கள் சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

**77. 2016 ஆம் ஆண்டு HSBC கணக்கெடுப்பின் படி, புலம் பெயர்ந்தோருக்கு அதிக சம்பளம் வழங்கும் நாடுகளில் இந்தியா எத்தனையாவது இடம் வகிக்கிறது?**

A. 11
B. 31
C. 23
D. 3

**விடை: D. 3**

2016 ஆம் ஆண்டு HSBC கணக்கெடுப்பின் படி, புலம் பெயர்ந்தோருக்கு அதிக சம்பளம் வழங்கும் நாடுகளில் இந்தியா 3 வது இடம் வகிக்கிறது. இது 9 முறையாக வெளியிடப்படும் கணக்கெடுப்பாகும். 190 நாடுகளை சார்ந்த 27,000 புலம்பெயர்ந்த மக்களிடம் கருத்துகளை கேட்டு இந்த அறிக்கை தரப்பட்டுள்ளது. இதில் சுவிசர்லாந்து முன்னிலையில் உள்ளது. ஆண்டிற்கு குறைந்தபட்சமாக $188,275 தொகையை ஊதியமாக தருகிறது. இது உலக

சராசரியை விட இரண்டு மடங்காகும். இது தவிர ஹாங்காங்கும் 3 வது இடம் பெறுகிறது.

**78. சமீபத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் National Disaster Management Authority (NDMA) ஆலோசகராக (கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு) நியமிக்கப்பட்டவர் யார்?**

A. Sandip Ray Chaudhury

B. V Thiruppugazh

C. P K Mishra

D. Manoj Kumar Sahoo

**விடை: B. V Thiruppugazh**

குஜராத் மாநிலத்தை சார்ந்த 1991 ஆண்டு பிரிவு IAS அதிகாரியான V Thiruppugazh மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் National Disaster Management Authority (NDMA) ஆலோசகராக (கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு) நியமிக்கப்பட்டுள்ளார். செப்டம்பர் 20, 2020 வரை இப்பதவியை வகிப்பார். 2015 ஆம் ஆண்டில் மத்திய அரசில் இணைவதற்கு முன்னர் குஜராத் மாநில பேரிடர் மேலாண்மை அமைப்பில் பணிபுரிந்துள்ளார். மேலும் பேராசிரியர் மிஸ்ரா உடன் இணைந்து பிரதமரின் கூடுதல் முதன்மை செயலாளர் பதவியும் வகித்துள்ளார். மிஸ்ராவும், Thiruppugazhவும் பேரிடர் மேலாண்மையில் அனுபவம் வாய்ந்தவர்கள்.

**79. பின்வரும் எந்த வங்கி பேஸ்புக் மெஸ்சன்ஜார் மூலம் பணத்தை செலுத்த “onchat” என்ற chatbot சேவையை அறிமுகம் செய்தது?**

A. State Bank of India

B. HDFC Bank

C. ICICI Bank

D. Axis Bank

**விடை: B. HDFC Bank**

பேஸ்புக் மெஸ்சன்ஜார் மூலம் பணத்தை செலுத்த “onchat” என்ற chatbot சேவையை HDFC வங்கி அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் மொபைல் ரீசார்ஜ், மின்கட்டணம், டாக்ஸி கட்டணம், DTH கட்டணம் போன்றவற்றை இந்த சேவை மூலம் செலுத்த முடியும். HDFC வங்கி கணக்கு இல்லாதவர்களும் இந்த சேவையை பயன்படுத்த முடியும்.

**80. “Death Under The Deodars: The Adventures of Miss Ripley-Bean” என்ற புத்தகத்தை எழுதியது யார்?**

A. விக்ரம் சேத்
B. அமிதாவ் கோஷ்
C. ஜும்ப லஹிரி
D. ரஸ்கின் பாண்ட்

**விடை: D. ரஸ்கின் பாண்ட்**

ரஸ்கின் பாண்ட் என்பவரால் எழுதப்பட்ட “Death Under The Deodars: The Adventures of Miss Ripley-Bean” என்ற புத்தகம் பெங்குவின் இந்தியாவால் சமீபத்தில் வெளியிடப்பட்டது. எட்டு கதைகளை கொண்ட இந்த புத்தகம் ரஸ்கின் பாணியில் நினைவில் நீங்காத கதாபத்திரங்களையும் மற்றும் அறிவு சார்ந்த கருத்துகளையும் எடுத்துரைக்கிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி படிக்க ஏற்றது.

**81. 2016 ஆண்டில் பெண்களுக்கான SAFF சாம்பியன்சிப்பை வென்ற நாடு?**

A. இந்தியா
B. பாக்கிஸ்தான்
C. நேபால்
D. வங்காளம்

**விடை: A.இந்தியா**

2016 பெண்களுக்கான SAFF சாம்பியன்சிப்பை இந்திய கால்பந்து அணி வென்றுள்ளது. வங்காள தேசம் சிளிகுரியில் நடைபெற்ற இறுதி சுற்றில் 3-1 என்ற கணக்கில் வங்காள தேசத்தை விழ்த்தியது. SAFF சாம்பியன்சிப் ஆனது

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. இதில் இந்திய 4 முறை இந்த சாம்பியன்சிப்பை வென்றுள்ளது. ஆனால் முதல் முறையாக இந்தியா தொகுத்து வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**82. 2017 ஆண்டுக்கான தேசிய பனிசறுக்கு சாம்பியன்சிப் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?**

A. இமாசலப் பிரதேசம்
B. அரியானா
C. சிக்கிம்
D. ஜம்மு காஷ்மீர்

**விடை: B. அரியானா**

13 வது தேசிய பனிசறுக்கு ஹரியானாவில் உள்ள குருக்ராமில் ஜனவரி 5 -ல் தொடங்கப்பட்டது. 2 நாட்கள் நடை பெற்ற விளையாட்டில் சுமார் 300 நபர்கள் கலந்து கொண்டனர். இதனை நடத்திய (ISAI) அமைப்பானது ,இதனை இரண்டு விதமாக பிரித்து உள்ளது. அவையாவது பிகுர் சறுக்கு மற்றும் ஷர்ட் டிராக் ஸ்பீட் சறுக்கு என்பதாகும். ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பிரிவினருக்கும் இடைய தனித்தனியாக நடத்தபடுகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதல், காசோலை மற்றும் பதக்கம் வழங்கபடுகிறது. வசுதா கோப்பையை பெண் பனி சருக்கு வீராங்கனைகள் வென்றுள்ளனர்.

**83. ரிசர்வ் வங்கியின் புதிய செயல் இயக்குனர் யார்?**

A. தீபா மாலிக்
B. ராஜேஸ்வரி ராவ்
C. சுரேகா மராண்டி
D. யூஎஸ் பாலிவால்

**விடை: C.சுரேகா மராண்டி**

சுரேகா மராண்டி, ரிசர்வ் வங்கியின் புதிய செயல் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நுகர்வோர் கல்வி, உற்பத்தி, பணபரிவர்த்தனை, பாதுகாப்பு மற்றும் முன்னேற்ற துறைகளை கண்காணிப்பர். இதற்கு முன்

லஞ்ச ஒழிப்பு அதிகாரியாகவும் முக்கிய பொது மேலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

**84. 2016 ஆண்டில் நடைபெற்ற ஹைடி தேர்தலில் வெற்றி பெற்றவர் யார்?**

A. மெரிசே நர்சிச்சே
B. ஜோவேநேல் மொய்சே
C. ஜூட் செலேச்டிம்
D. ஜீன்-சார்லஸ் மொய்சே

**விடை: B. ஜோவேநேல் மொய்சே**

ஜோவேநெல் மாசே, ஹைதியன் மிகப்பெரிய தொழிலதிபராக உள்ளார். மேலும் Haitian Tet Kale Party (HTKP) உறுப்பினராக உள்ளார். இவர் தற்போது 2016 ஆண்டுக்கான ஹைடி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். பிப்ரவரி 7,2017ல் பதவி ஏற்ப்பார் என எதிர்பார்க்கபடுகிறது

**85. இந்தியாவின் முதல் உயிரி எரிவாயு பேருந்து மாநிலத்தில் எந்த நகரத்தில் செயல்படுத்தப்பட்டு உள்ளது?**

A. கொல்கத்தா
B. டேராடூன்
C. புது தில்லி
D. புனே

**விடை: A.கொல்கத்தா**

மனித மற்றும் விலங்கு கழிவுகளை பயன்படுத்தி உருவாக்கிய இந்த உயிரி எரிவாயு பேருந்து கொல்கத்தாவில் உள்ள உல்டடங்கா முதல் கரியா வரை செயல்படுத்தபட உள்ளது. 17.5கிமி தூரத்திற்கு பயண சீட்டு கட்டணமாக ரூ.1 வசூலிக்கபடும். முதற்கட்டமாக உயிரி எரிவாயு பேருந்து 12 நகரங்களில் செயல்படுத்தப்படுத்தப்படுகிறது. டோல்லுகுனே, உல்டடங்கா-உப்பு ஏரி போன்ற பகுதிகளில் செயல்படும். மற்ற பகுதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவித்து உள்ளனர். உயிரி எரிவாயு என்பது பலதரப்பட்ட வாயுகலவை, ஆக்ஸ்சிஜன் அற்ற நிலையில் கரிம பொருளாக மாறுவதாகும்.

இது நிறமற்ற,நச்சுதன்மையற்ற,பற்ற கூடிய எரிபொருருளாகும். மின்சார உற்பத்தி மற்றும் சமையல் போன்றவற்றிற்கு பயன்படுகிறது

**86. புகழ்பெற்ற ICC Hall of Fame இல், பதவியேற்ற கிரிக்கெட் வீரரான ஆர்தர் மொறிஸ் எந்த நாட்டை சேர்ந்தவர்?**

A. இங்கிலாந்து
B. மேற்கிந்திய தீவுகள்
C. ஆஸ்திரேலியா
D. தென் ஆப்ரிக்கா

**விடை: C.ஆஸ்திரேலியா**

ஆஸ்திரேலிய நாட்டை சேர்ந்த புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரான ஆர்தர் மொறிஸ் ICC Hall of Fame இல், பதவியற்றுள்ளார் ICC Hall of Fame இல், பதவியேற்ற 82-வது நபராக ஆர்தர் மொறிஸ் உள்ளார். தொடக்க ஆட்டகாரராக டான் பிரட்மேனை விஞ்சும் அளவிற்கு தன் ஆட்டத்தை வெளிபடுத்தியுள்ளார்.

**87. எந்த நாடு சமிபத்தில் சித்வான் ஏலேப்ஹன்ட் (Chitwan Elephant) பண்டிகையை சுற்றுலா பயணமாக தொடங்கியது?**

A. இந்தியா
B. சீனா
C. மியான்மார்
D. நேபால்

**விடை: D.நேபால்**

13-வது சித்வான் ஏலேப்ஹன்ட் பண்டிகையை நேபாளதில் உள்ள கத்மாண்டில் கொண்டாடபடுகிறது. இது சித்வான் தேசிய பூங்காவில் டிசெம்பர் 26-30ல் நடந்தது. 50கும் மேற்பட்ட யானைகள் கலந்துகொண்டன. இந்த பண்டிகையில் 20,000கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் கலந்துகொண்டனர். 5 நாட்கள் நடைபெற்ற விழாவில் யானைகள் நடனம், யானைகள் அழகு போட்டி, யானைகள் நடை, யானைகள் ஓவிய போட்டி ஆகியவை

நடைபெற்றன. இதனை regional hotel asssociation என்ற நிறுவனம் நடத்தியது. மக்கள் யானைகளுடன் நண்பர்களை போன்று பழகினர். இதன் முக்கியத்துவம் ஆனது வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு மேம்பாடகும். அப்பகுதியை சுற்றுலா பயணிகள் பார்வையிடும் வண்ணம் சுற்றுலா தலமாக மற்ற முடிவு செய்துள்ளனர்.

**88. இந்தியாவில் சிறு மற்றும் நடுத்தர தொழில் முன்னேற்றதிற்காக தொடங்கப்பட்ட பயிற்சி முறையான "digital unlocked". இது எந்த நிறுவனத்தால் தொடங்கபட்டது?**

A. மைக்ரோசாப்ட்
B. பேஸ்புக்
C. கூகிள்
D. ட்விட்டர்

**விடை: C.கூகிள்**

கூகிள் CEO சுந்தர் பிச்சை அறிமுகம் செய்த"digital unlocked" இந்தியாவில் சிறு மற்றும் நடுத்தர தொழில் முன்னேற்றதிற்காக தொடங்கப்பட்ட பயிற்சி முறையாகும். டெல்லி நடைபெற்ற விழாவில் தகவல் மற்றும் தொழில் நுட்பம் துறை மற்றும் Federation Of India chamfer of commerce and industry (FICCI) சார்பில் நடைபெற்ற விழாவில் அறிமுகம் படுத்தபட்டது. முக்கிய நோக்கமாக சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழில் புரியும் மக்களிடைய இணையதள வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் அறிமுகம் செய்யப்படுள்ளது. இதை தவிர My business மற்றும் Prima செயலி அறிமுகபடுத்தப்பட்டுள்ளது.

**89. ராக்கிபில்லேர் Rockefeller Foundation அறக்கட்டளையின் புதிய தலைவர் யார்?**

A. ராஜீவ் ஷா
B. காந்தி மேத்தா
C. அருண் சட்டோபாத்யாய
D. ஜான் ட்கெய்

**விடை: A.ராஜீவ் ஷா**

ராஜீவ் ஜ ஷாஹ் ராக்கிபில்லேர்ரின் புதிய தலைவராக தேர்ந்த்தெடுக்க பட்டுள்ளார். இவர் United state agency of international developmentல் முன்னால் தலைவராக பணிபுரிந்துள்ளார். மிகக்குறைந்த வயதில் இதனை வழி நடத்தும் முதல் அமெரிக்கவாழ் இந்தியன் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஆண்டும் ராக்கிபில்லேர் 200 டாலர்களை ஆப்ரிக்கா மற்றும் அதனை சேர்ந்த பொருளாதார முன்னேற்றதிற்கும், போர்கால முன்னேற்றதிற்கும் உதவுகிறது. இதனை 1913 இல் ஆயில் டைகூன் ஜான் டி ராக்கிபில்லேர் என்பவர் நியூயார்க்கில் தொடங்கினர்

**90. சமிபத்தில் காலமான அப்துல் ஹலீம் ஜாபர் கான் பிரபலமான இசைகலைஞர். இவருடன் தொடர்புடைய இசைகருவி?**

A. புல்லாங்குழல்
B. தபலா
C. சாரங்கி
D. சிதார்

**விடை: D.சிதார்**

அப்துல் பிரபலமான சிதார் இசைகலைஞர், சமிபத்தில் மும்பையில் காலமானார். சிதார் ட்ரினிட்டி என புகழப்படும் இசைகலைஞர் வரிசையில் பண்டிட் ரவி ஷங்கர், உத்டட் விலஎட் இவர்கள் வரிசையில் இப்பொழுது அப்துல் ஹலீம் ஜாபர் கான் உள்ளார். இவர் ஜாபர் க்ஹனி பாஜி என்று அழைக்கபடுகிறார். ஹிந்தி படங்களாகிய Mughal-E-Azam, Kohinoor, Goonj Uthi Shehnai and Jhanak Jhanak Payal Baaje படங்களில் இவரது படைப்புக்களை காணலாம்.

**91. அஸ்ஸாமில் தொடங்கிய 2017 ஆண்டுக்கான சர்வதேச வேளாண் தோட்டக்கலை நிகழ்ச்சி எந்த நகரத்தில் நடைபெற்றது?**

A. பொங்கைகாம்
B. பிலஸ்பிற
C. கவுகாத்தி

D. கோல்பாரா

**விடை: C.கவுகாத்தி**

அஸ்ஸாம் மாநிலம் கவுகாத்தியில் 4வது சர்வதேச வேளாண் தோட்டக்கலை நிகழ்ச்சி ஜனவரி 6 முதல் 9 வரை நடத்தப்பட்டது. 600க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக்கவும், விளைச்சலை அதிகப்படுத்தவும், தோட்டதொழில்முறை முன்னேற்றம் போன்றவை பயிற்சி அளிக்கபட்டன. இந்தியாவில் உள்ள 200கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் 10க்கும் மேற்பட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் கலந்துகொண்டன.

**92. சமீபத்தில் காலமான நடிகர் ஓம் பூரி, எந்த மாநிலத்தை சேர்ந்தவர்?**

A. பஞ்சாப்
B. அரியானா
C. உத்தரப் பிரதேசம்
D. மத்தியப் பிரதேசம்

**விடை: B. அரியானா**

அரியானா மாநிலத்தை சேர்ந்த நடிகர் ஓம் பூரி, சமீபத்தில் இவர் மும்பையில் காலமானார். தனித்துவமான தன்மை கொண்ட இவரது நடிப்பை பாலிவுட் முதல் ஹாலிவுட் வரை காணலாம். அரியானாவில் உள்ள அம்பல்லாவில் பிறந்த இவர் புன்வில் உள்ள திரைபட மற்றும் தொலைகாட்சி கல்லூரியில் திரைப்பட துறையில் இளங்கலை பட்டம் பெற்றவர். தேசிய நாடகபள்ளியில் 1973 ஆண்டை சார்ந்த முன்னால் மாணவராவார். 1976ல் இவரது மராத்திய படைப்புகளான "Ghashiram Kotwal" அரங்கேறின. இதை தவிர Bhavni Bhavai, Ardh Satya, Dharavi, Aakrosh, Ardh Satya, Agneepath, Bajrangi Bhaijaan" இவரது வேறு சில படைப்புகள்.

சர்வதேச அளவில் பிரிட்டிஷ் படங்கள் இவருக்கு புகழினை தேடிதந்தது. அவற்றுள் சில "My Son the Fanatic", "East Is East", "The Parole Officer" போன்றவையாகும்.

**93. 2017 ஆண்டுக்கான, உலக புத்தக கண்காட்சி (NDWBF) புது டெல்லியில் நடைபெற்றது இதன் முக்கிய கருப்பொருள் யாது?**

A. Vivid Bharat - Diverse India
B. Manushi - Books Written on and by Women
C. Kathasagara: Celebrating Children's Literature
D. Suryodaya: Emerging voices from North East India

**விடை: B.Manushi - Books Written on and by Women**

25 வது உலக புத்தக கண்காட்சி (NDWBF) தில்லி பிரகதி மைதானத்தில், ஜனவரி 7-15 வரை நடைபெற்றது. இதன் முக்கிய கருப்பொருள் Manushi - Books Written on and by Women என்பதாகும். பழமையான காலம் முதல் தற்போது உள்ள காலம் வரை உள்ள பெண் கவிஞர்களின் சிந்தனையில் உள்ள செல்வா செழிப்பை எடுத்து உரைக்கிறது. மேலும் படிக்கும் கலாச்சாரத்தை மேம்படுத்தும் வண்ணம் அமைந்தது. இது தேசிய புத்தக அறக்கட்டளை சார்பாக நடைபெற்றது. உலக புத்தக கண்காட்சி பற்றிய 60 வருட வரலாறு மற்றும் குழந்தை செயல்திறனை வளர்ப்பது குறித்து, தேசிய இளைஞர் தினமாக விவேகானந்தர் பிறந்த நாளான ஜனவரி 12 அன்று நடைபெற்ற விழாவில் விவாதிக்கப்பட்டது. அதில் இளைஞர்களுக்கான பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. ஜப்பான், நாடுகள் ஜெர்மனி,எகிப்து போன்ற நாடுகள் கலந்துகொண்டன.

**94. 2017 பிரவசி பாரதிய திவாஸ் (PBD) எந்த நகரில் கொண்டாடப்பட்டது?**

A. புது தில்லி
B. குருக்ரம்
C. சென்னை
D. பெங்களுரு

**விடை: D.பெங்களுரு**

14வது 2017 பிரவசி பாரதிய திவாஸ் பெங்களுரு, கர்நாடக மாநிலத்தில் ஜனவரி 7-9 வரை நடைபற்றது. இதன் நோக்கமானது' இந்திய புலம்பெயர்வு பற்றியதாகும். இதில் சிறப்பு விருந்தினராக போர்ச்சுக்கல் பிரதமர்

அந்தோனியோ கோஷ்ட பங்கேற்றார். பிரவசி பாரதிய திவாஸ் இந்திய அரசுக்கு உதவும் சிறந்த தளாமாக இருக்கும் என எதிர்பார்க்க படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 9 2017 பிரவசி பாரதிய திவாஸ் நடைபெறுகிறது. ஏனெனில் ஜனவரி 9 ஆனது மகாத்மா காந்தி தென் ஆப்ரிக்காவில் இருந்து இந்திய வந்த தினமாகும்

**95. எந்த சர்வதேச அமைப்பு 2017 ஆம் ஆண்டை" சர்வதேச நிலையான சுற்றுலா மேம்பாட்டு வருடமாக" அறிவித்துள்ளது?**

A. உலக வர்த்தக அமைப்பு (WTO)
B. ஐக்கிய நாடுகள் அவை (UN)
C. சர்வதேச நாணய நிதியம் (IMF)
D. ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB)

**விடை: B.ஐக்கிய நாடுகள் அவை(UN)**

ஐக்கிய நாடுகள் அவை (UN),2017 ஆம் ஆண்டை' நிலையான சுற்றுலா மேம்பாட்டு வருடமாக அறிவித்துள்ளது. உலகத்தில் உள்ள பல்வேறு நாட்டினருக்கிடைய சுற்றுலா துறையை மேம்படுத்த ஏற்படுத்தபட்டுள்ளது. இதன் மூலம் நாடுகளுக்கிடைய நல்லுறவு வளர்ச்சியடையும் மற்றும் தொழில் முறையை முன்னேற்ற ஏற்படும்.

**96. "good smaritan policy" எந்த மாநில அரசால் நடைமுறைபடுத்தப்பட்டது?**

A. ஒடிசா
B. கர்நாடக
C. தில்லி
D. கேரளா

**விடை: C.தில்லி**

டெல்லி அரசானது, " good smaritan policy " எனும் கொள்கையை நடைமுறைபடுத்தியது. இதன் மூலம் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுபவர்களை ஊக்கபடுத்தும் வண்ணம் Rs 2,000

மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படும் என டெல்லி அரசு தெரிவித்துள்ளது.

**97. சமீபத்தில் காலமான Gangmumei Kamei இவர் எந்த மாநிலத்தை சேர்ந்த வரலாற்று ஆசிரியர்?**

A. மணிப்பூர்
B. ஒடிசா
C. ஜம்மு காஷ்மீர்
D. இமாசலப் பிரதேசம்

**விடை: A.மணிப்பூர்**

சமீபத்தில் இம்பாலில் காலமான Gangmumei Kamei மணிப்பூரை சேர்ந்த வரலாற்றாசிரியர் மற்றும் இலக்கிய அறிஞர். மணிப்பூர்,நாகலாந்து,அஸ்ஸாம் போன்ற இடங்களில் பரவி உள்ள செலயொங்கராங் என்ற வகுப்பை சேர்ந்தவர். அரசியல் மற்றும் பொதுநலன்களில் அக்கறை கொண்ட இவர் 1993 ல் பெடரல் கட்சியை ஆரம்பித்தார். இவரின் புகழ் பெற்ற புத்தகங்கள் A History of Modern Manipur (1826-2000), History of Zeliangrong Nagas: From Makhel to Rani Gaidinliu போன்றவையாகும்.

**98. 2017 ஆண்டுக்கான தீவு சுற்றுலா விழா எந்த மாநில / யூனியன் பிரதேசதத்தில் தொடங்கியது?**

A. அந்தமான் நிக்கோபார்
B. குஜராத்
C. ராஜஸ்தான்
D. லட்சத்தீவுகள்

**விடை: A.அந்தமான் நிக்கோபார்**

ஜனவரி 6 முதல் 14 வரை கொண்டாடப்படும் சுற்றுலா விழா ஆனது அந்தமான் நிக்கோபாரில் உள்ள போர்ட்பிளேயரில் நடைபெற்றது. சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கினை தீவுகளில் ஊக்குவிக்க தொடங்கப்பட்டது. இதனை ஆளுநர் ஜகதிஸ் முக்ஹி ITF மைதானத்தில் தொடங்கிவைத்தார்.

நிறம், மொழி, மதம், இனம் வேறுபாடுகளை தவிர்த்து மக்களிடைய சகோதரதத்துவத்தை இந்த விழா வளர்க்கிறது. 10 நாள் நடைபெறும் இவ்விழாவில் பல்வேறு மக்கள் தங்களின் பல்வேறு கலாச்சாரத்தினை நிலைநாட்டுகிறனர். சர்வதேச கலாச்சார குழுவாகிய Khazkhistan நாட்டை சார்ந்த குழுவும் பங்கேற்றது. மத்திய மற்றும் தென்அந்தமான் மற்றும் நிக்கோகோபரிளிருந்து வந்த கலைஞர் பங்கேற்றனர். இதை தவிர உணவு விடுதி,கேளிக்கை விளையாட்டுகள் மற்றும் கைவினை பொருட்கள் காட்சியும் இடம்பெற்றன

**99. "நீரிழிவு நோய்க்கான யோகா" பற்றிய சர்வதேச மாநாடு எந்த நகரத்தில் நடைபெற்று வருகிறது?**

A. புது தில்லி
B. சென்னை
C. புனே
D. போபால்

**விடை: A.புது தில்லி**

"நீரிழிவு நோய்க்கான யோகா" பற்றிய சர்வதேச மாநாடு டெல்லியில் ஜனவரி 4 -6 நடைபெற்றது. 3 நாட்கள் நடைபெறும் இதனை மாநில ஆயுஷ் அமைச்சர் ஸ்ரிபாத் எச்சோனைக் தொடங்கிவைத்தார். இதில் நீரிழிவு நோயை எவ்வாறு கட்டுபடுத்துவது மற்றும் வருமுன் காத்தல் போன்றவைகள் யோகா மூலம் மேற்கொள்ளபட்டன. இம்மாநாடு ஆய்ஷ் மற்றும் அல்லோபதி படிக்கும் மாணவர்களுக்கும், ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் நிரிழிவு நோய்க்கு எதிரான ஆராய்ச்சிக்கு நல்ல தளமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**100. சர்வதேச காத்தாடி விழா (உத்ராயன்) பின்வரும் எந்த மாநிலத்தில் தொடங்கியது?**

A. ஒடிசா
B. ராஜஸ்தான்
C. குஜராத்
D. அசாம்

**விடை: C.குஜராத்**

30 வது சர்வதேச காத்தாடி விழா (உத்ராயன்), குஜராத்தில் ஜனவரி 8-13 வரை நடைபெற உள்ளது. இதை தவிர மற்ற 3 சர்வதேச காத்தாடி விழா இந்தியாவின் பல்வேறு இடங்களில் நடைபெற உள்ளது. ஹைதராபாத் சர்வதேச காத்தாடி விழா தெலுகானவில் ஜனவரி 14-15 அன்று நடைபெற உள்ளது. டெல்லி சர்வதேச காத்தாடி விழா ஜனவரி 16-17 அன்று நடைபெற உள்ளது. பெல்காம் சர்வதேச காத்தாடி விழா ஜனவரி 18 -22 அன்று நடைபெற உள்ளது. இந்த விழாக்கள் மாநில அரசுகளான குஜராத், தெலுகானா, கர்நாடக, டெல்லி ஆகியவற்றின் சுற்றுலா துறை சார்பாக நடைபெற உள்ளது. தோரயமாக 35 சர்வதேச மற்றும் 5 தேசிய அணிகள் பங்குபெறும் என எதிர்பார்க்கபடுகிறது. காத்தாடி போட்டிகள், காத்தாடிகளின் கண்காட்சி, காத்தாடி செய்யும் வழிமுறைகள் ஆகியவை இதில் இடம்பெறும்.